Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து
(C/1283)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 தை 24 செவ்வாய்க்கிழமை (07.02.2012) பக்கங்கள் 16 ஓசை – 129




எரிபொருள் விலை உயருமா? 08

இரும்பு பொறுக்கியவர்கள் பாடசாலையில்



05



ஒரு மணி நேரம் கிணற்றில் 10



பிரதமராவது நோக்கமல்ல 12

# வடக்கின் குறைகள் விரைவில் தீர்க்கப்படும்

## யாழில் ஜனாதிபதி மகிந்த உறுதியளிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் அனைத்துத் துறைகளிலும் குறைகள் உள்ளன. எனவே அவற்றுக்கு உரிய வகையில் விரைவாக தீர்வு காணப்படுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பின் பேரில் நேற்றுமுன்தினம் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்த ஜனாதிபதி நேற்றைய தினம் யாழ் மாவட்ட செயலகத்தில் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அரச அதிபர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளுடனான கலந்துரையாடலை நடத்தினார். இதன் போதே ஜனாதிபதி மேற்கண்ட உறுதிமொழியை அளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் மீள்குடியேற்றம், வீட்டுத்திட்டம், விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், மின்சாரம், வீதி அபிவிருத்தி, உள்ளூராட்சி திணைக்களம் உள்ளிட்ட (15 ஆம் பக்கம் பார்க்க)

## பிளேக்கின் வருகையை உறுதி செய்தது அரசு

(கொழும்பு)

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் எதிர்வரும் 12 ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளதை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இச்செய்தியை உறுதிப்படுத்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் றொபேட் ஓ பிளேக்குடன் மற்றொரு அமெரிக்க அதிகாரியும் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளதாக கூறியுள்ளார்.

அதேவேளை, ஜெனிவாவில் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவர அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் தலைவர்களுக்கு ஜெனிவா தீர்மானத்துடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து இவர்கள் விளக்கம் அளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


## இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமாக 13 ஆவது திருத்தத்தை ஏற்கமுடியாது

### கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. எனவே, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமாக 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் அதிகாரப் பகிர்வு யோசனையாக 13 ஆம் திருத்தச்



சட்டமூலத்தை ஏற்றுக்கொள்வதில் சிக்கல்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். 13 ஆம் திருத்தச் சட்டமூலத்திற்கு அப்பாலான (15 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கு இராணுவ மயமென்ற குற்றச்சாட்டில் உண்மை எதுவுமில்லை

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இராணுவ மயமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை பாதுகாப்பு மற்றும நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

நாட்டின் 22 மாவட்டங்களும் ஒரே சமமாக நிர்வகிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் டெக்கான் குரோனிக்கல் ஊடகத்திற்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

30 வருட யுத்தம் நிறைவுற்று 3 வருட காலத்தில் வடக்கில் பாரிய அபிவிருத்திகள் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுவின் அறிக்கையில் சில கேள்விகளுக்கு பதில் இல்லை

### பிரிட்டன் தூதுவர் கூறுகிறார்

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் சிலகேள்விகளுக்கு பதில் கிடையாது என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் சில விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார்.

பல கேள்விகளுக்கு பதிலளிக்காமலேயே ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் பிரித்தானிய அமைச்சர் அலிஸ்டயர் பர்ட் ஏற்கனவே பிரிட்டன் நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்



துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் பக்கச்சார்பற்ற சுயாதீன விசாரணைகள்அவசியம் என்பதே பிரித்தானியாவின் நிலைப்பாடு எனவும், அதில் மாற்றமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் போது கணிசமான அளவு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்த அமெரிக்கா ஆதரவு

(கொழும்பு)


உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்த அமெரிக்கா பூரண ஆதரவளிக்கும் என தென் ஆசியாவிற்கான அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுபீட்சத்தையும், நிலையான சமாதானத்தையும் ஏற்படுத்த உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு வொஷிங்டனில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்மக்களுக்கான அதிகாரத்தை அரசாங்கம் வழங்க வேண்டும்




(கொழும்பு)

ராஜீவ் காந்தி படுகொலையை அடுத்து புலிகளின் வன்முறை செயல்பாடுகளை நிராகரித்துள்ள அதேவேளையில் உறுதி அளித்துள்ளபடி தமிழ் மக்களுக்கு இலங்கை அரசாங்கம் அதிகாரத்தை பிரிதது வழங்குவது தொடர்பில் தான் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாகவும், (15 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.மத்திய கல்லூரியின் நீச்சல் தடாக திறப்புவிழா நிகழ்வில்...








# அமைச்சர் டக்ளஸ் போன்ற தலைவர்களை யாழ்.மத்திய கல்லூரி உருவாக்க வேண்டும்

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவனான டக்ளஸ் தேவானந்தா இன்று அமைச்சராக உள்ளார். இவரைப் போன்ற பல தலைவர்களை யாழ்.மத்திய கல்லூரி எதிர்காலத்தில் உருவாக்க வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்.மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை சம்பிரதாயபூர்வமாக நேற்றுத் திறந்து வைத்தபின் அங்கு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து உரையாற்றும் போது இலங்கையில் மும்மொழி வேலைத்திட்டத்தை ஆரம்பித்து உள்ளோம். இந்த நாட்டில் உள்ள எல்லாப் பிள்ளைகளும் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளைப் பயில வேண்டும்.

உங்களுடைய பெற்றோர்களை மறந்து விடாதீர்கள். அதே போல் இந்த நாட்டையும் மறந்து விடாதீர்கள். படிப்பு மட்டும் போதாது. நல்ல மனிதநேயமிக்க தேசபக்தியுள்ள மாணவர் சமுதாயம் யாழ். மண்ணில் உருவாக வேண்டும்.

உங்கள் பாடசாலையில் படித்தவர்கள் நல்ல நிலையில் உள்ளனர். நீங்களும் அதேபோல உருவாக வேண்டும். குறிப்பாக எதிர்வீரசிங்கம் போல பலர் உருவாக வேண்டும் இலங்கையின் சர்வதேச அணியிலும் இக்கல்லூரி மாணவர்கள் இடம்பிடிக்க வேண்டும்.

கொழும்பில் உள்ள பாடசாலைகளில் உள்ள அனைத்து வசதி வாய்ப்புக்களையும் கிராமப்புற பாடசாலைகளில் ஏற்படுத்திக் கொடுத்து அந்த மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்வது எமது கடமை.

இன்று கொழும்பு விசாக்கா வித்தியாலய மாணவிகள் இங்கு வந்து தமது திறமைகளை வெளிப்படுத்தியது போல் இனி வரும் காலங்களில் இங்குள்ள மாணவர்களும் கொழும்பில் வந்து இதைவிட திறமையாக தங்களது ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

நேற்றைய நிகழ்வின் ஆரம்பத்தில் விளையாட்டுத்துறையை கிராமத்திற்கு கொண்டு செல்கின்ற மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் பிரகாரம் 'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பினால் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட நீச்சல் தடாகத்தையே ஜனாதிபதி திறந்து வைத்தார்.

கல்லூரி அதிபர் எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது இந்த நீச்சல் தடாகத்தை அமைப்பதில் பெரும் பங்காற்றிய இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு மக்களின் சார்பில் எனது நன்றிகைளத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.

அந்த வகையில் இன்றைய நாள் ஒரு பொன்னான. நாள் என்பதுடன் தொடர்ந்தும் இவ்வாறான அபிவிருத்திப் பணிகளை கல்வித்துறையில் மட்டுமல்ல பல்வேறு துறைகளிலும் முன்னெடுக்கப்படுமென்றும் சுட்டிக் காட்டினார்.


## சிறு விளம்பரம்



### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்


சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1285)


# சாவகச்சேரி வைத்தியசாலையின் விடுதி திறப்பு விழாவின் போது...





நாம்பிறவாத இடமோ, பேசாத மொழியோ, தோன்றாத குலமோ கிடையாது. எனவே எல்லா நாடும் நமது நாடே. எல்லா மக்களும் நமது சகோதரர் என்று கருதி சாந்தமாகவும், அன்பாகவும் வாழவேண்டும்.

-வாரியார்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## மற்றவர் துயர் கண்டு உருகுவன மனங்கள்!

பழைய கதைகளைப் பேசிக் கொண்டிருக்கையில், தோல்விக்கு மொத்தம் மூன்று பிழைகள் காரணம் என்று சொன்னார் நண்பர். "ராஜீவ் காந்தியை போட்டது, முஸ்லிம்களை ஊரைவிட்டுத் துரத்தினது, கருணாவை விலக்கிக் கிழக்கைக் கைவிட்டது" என்றார்.

உண்மைதான். ஆனால், அதையே இப்படி மூன்றாய்ச் சொல்லலாம் என்று தோன்றியது. ஒன்று, நம்மிடமிருந்த விலக்குதல் செயல்பாடு. ஏனைய அமைப்புகளை, முஸ்லிம்களை, மலையகத்தை, இந்தியாவை, நம் போராட்டத்தை நம்புவதற்கு ஒரு நாடு கூட இல்லாமல் மொத்த சர்வதேசத்தை, உள்ளேயும் கூட விலக்குதல்களின் மூலம் தமிழ்மக்களை தனியர்களாக்கியமை.

இரண்டு, ஜனநாயகப் பண்புகளை முன்னேறுவதற்குத் தடை என்று கண்டது. அதாவது, போராட்டத்திற்குத் தடைகளாகக் கருதும் நபர்களை அவர்கள் எத்தரப்பிலிருந்தாலும் உடல்மீதியின்றி அழித்துவிடுவதன் மூலமே கடந்து மேற்சென்றது.

மூன்று, நாம் கேட்பதைத் தவிர வேறு தீர்வுகள் எதையும் நம்பாமல் ஆயுதத்தை மட்டுமே நம்பியதும், மக்களுக்கு அதைவிட வேறு வழியில்லை என்று நம்பச் செய்து ஒருவித பயங்கரத்தின் பிடியிலேயே வைத்திருந்ததும்....

இலங்கை அரசோ, இந்தியாவோ, ஏனைய சர்வதேச நாடுகளோ எவராயினும், இன்னலுற்றுக் கிடக்கும் ஈழத்தமிழர்களாகிய எங்கள் நலனுக்காக மட்டுமே சிந்திக்க வேண்டும் என்ற சிறுபிள்ளைத்தன எதிர்பார்ப்பையே இப்போதும் நம்மில் பெரும்பான்மையோர் கொண்டிருக்கிறோம். எல்லோரும் அவரவர் நலன்களிலிருந்துதான் அடுத்தவர் பிரச்சினைக்கு வருவார்கள் என்ற எளிய உண்மையைக் கூட புரிந்துகொள்ள மறுக்கும் பேதமை இது!

எதார்த்தத்தைப் புரிந்துகொள்ளும் விவேகம் எம்மிடம் இருந்திருந்தால் அல்லது அத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்கு மூர்க்கத்தனமான எதிர்ப்பைக் காட்டுவதைத் தவிர்த்திருந்தால் கூட எப்போதோ நாம் மீள ஏதாவது வழி கிடைத்திருக்கும். அநியாய அழிவுகளைத் தவிர்த்து அங்கிருந்து மேலும் உரிமைகளுக்காய் முன்னேற பிடி கிடைத்திருக்கும்.

எங்களைத் தவிர மற்ற எல்லோருமே பிழை என்ற பாசிஸ மனநிலைக்கு மெல்ல மெல்ல நாம் போய்ச் சேர்கிறோம் என்பதை நாம் உணர்ந்துகொண்டிருக்க வேண்டும். அவ்வாறு உணர்ந்து கொண்டிருந்தால், மற்றவர்களின் நலன்களுக்கும் நமது தேவைகளுக்குமிடையில் ஒரு சந்திப்புப் புள்ளியைக் காண்பதை நோக்கி நாம் நகர்ந்திருக்கலாம்.

பகை மறத்தலே இந்தத் தீவு மக்களின் வாழ்வுக்கு வழி. இது ஒன்றும் சிரமசாத்தியமானதல்ல. 94 இலும் பின்னர் 2002 இலும் வட கிழக்கிற்கு வந்து யுத்த அழிவுகளையும் சிறுபான்மையின மக்கள் அடைந்த அவலங்களையும் கண்டு கண்ணீர் வடித்த சாதாரண சிங்கள மக்களை நாம் அறிவோம். அந்த உணர்வுகளே பரிமாறப்பட வேண்டியவை. மனிதர்களிடமுள்ள வன்முறையுணர்வைத் தூண்டுவதற்குப் பதிலாக கருணையுணர்வைத் தூண்டிவிடவே புத்திஜீவிகளும், மதப் பெரியவர்களும், கல்விமான்களும், ஊடகங்களும் முன்வர வேண்டும்.

மனித மனங்கள் இயல்பிலேயே மற்றவர் துயர் கண்டு உருகுவனதான். அரசியலுக்கும், சுயநலத்துக்கும், ஆதிக்க விருப்புக்குமாகக் கட்டப்படும் ஆவேசங்களே இதை மறைத்து வெறுப்பையும் விரோதத்தையும் உண்டாக்குகின்றன.

சிங்களப் புத்திஜீவிகளுடனும் இணைந்து சிங்கள மக்கள் மத்தியில் உண்மை நிலைவரங்கள் உணர்த்தப்படுவதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டும். தமிழ் மக்களிடமும் ஆதிக்க மனோபாவ வெற்று ஆவேசங்களைத் தூண்டுவதை விடுத்து, சேர்ந்து வாழ்தலின் தேவை பற்றிச் சொல்ல வேண்டும்.

துன்புற்று நலிந்தவர்களுக்கு உதவுகிற மகிழ்ச்சியையும் மறுபுறம் பகை மறந்து கருணையை ஏற்கும் நெகிழ்ச்சியையும் இந்தத் தீவு மக்களிடம் ஏற்படுத்தவே நாம் உழைக்க வேண்டும்.

- ஆசிரியர்

# கண்ணிவெடிகளை அகற்ற பத்து ஆண்டுகள் செல்லும்

## ஐ.நா. கண்ணிவெடி அகற்றும் பிரிவு

(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற வடக்கு பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்ற இன்னும் ஒரு தசாப்த காலம் எடுக்கும். அதாவது அனைத்து கண்ணி வெடிகளையும் அகற்ற 10 வருடங்கள் செல்லும் என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி ஸ்தாபனத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கண்ணிவெடி அகற்றும் பணிகள் மிகவும் கடினமானது. வடக்கில் 2011ஆம் ஆண்டு 126 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ளது.

2010 ஜூலை மாதத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. மன்னாரில் 33.8 சதுர கிலோமீற்றர், முல்லைத்தீவில் 27.7 சதுர கிலோமீற்றர், கிளிநொச்சியில் 23 சதுர கிலோமீற்றர், வவுனியாவில் 15 சதுர கிலோமீற்றர் மற்றும் யாழ்ப்பாணத்தில் 5 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் எஞ்சியுள்ளது.

அதுமாத்திரமன்றி பொலனறுவை, அநுராதபுரம் மாவட்டங்களில் எல்லை பகுதிகளில் சில இடங்களிலும் கிழக்கின் சில பகுதிகளிலும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் எஞ்சியுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர்.

# குடாநாட்டின் பல பகுதிகளில் இவ்வாரம் மின் தடை

(யாழ்ப்பாணம்)

மின் விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு, வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளது. 08 ஆம் திகதி புதன்கிழமை, 10 ஆம திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி. நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

09 ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 11ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30மணியில் இருந்து மாலை 5.00 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, காங்கேசன் துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும் மின்தடைப்படும்.

மேலும், 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியில் இருந்து மாலை 5.00 மணி வரை கோண்டாவில் CTB டிப்போ பிரதேசம், நீர்ப் பாசன வடிகால் அமைப்பு திணைக்களப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

11ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணியில் இருந்து மாலை 5.00 மணிவரை இணுவில், மருதனார் மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். என யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# புனரமைப்பு

(கொழும்பு)

ஓகஸ்ட் மாதத்திற்குள் வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையிலான மின்சாரக் கட்டமைப்பை புனரமைக்கவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ள வவுனியா மற்றும் முல்லைதீவு மாவட்டங்களுக்கான மின்சாரத் திட்டங்களின் தேர்ச்சி குறித்து ஆராயும் கூட்டத்திலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மின்சாரக் கட்டமைப்பின் 132 கட்டமைப்பை தாம் தற்போது புனரமைத்து வருகிறோம் ஓகஸ்ட் மாதமாகும் போது வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையான கட்டமைப்பு புனரமைக்கப்படும்.

இந்த பணிகள் நிறைவு பெற்றதும் குறைந்த மின்வலு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அறிக்கையை செயற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கவில்லை

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கவில்லை என பிரதான எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன.

ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ளதாக அந்தக் கட்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

தேசியப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் வகையில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாக செயற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மட்டத்தில் இலங்கை மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் அதன் பரிந்துரைகளை செயற்படுத்துவதாக அரசாங்கம் கூறிவந்ததாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் அரசாங்கம் அது குறித்து மௌனம் சாதிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகம் ஏற்படவேண்டும்

## கூறுகின்றது மக்கள் விடுதலை முன்னணி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிவில் நிர்வாகத்தை உடனடியாக ஸ்தாபிக்க வேண்டிய தேவையுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.


அந்தக் கட்சியின் பிரசார செயலாளர் விஜித்த ஹேரத் கருத்து வெளியிடுகையில், இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்து அவர்களுக்கான வசதிகளை வழங்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

எவ்வாறாயினும் இந்த அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தவறியுள்ளது.

இந்த நிலையிலேயே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சாட்சியங்களை பரிசீலித்து தமது அறிக்கையை வெளியிட்டுள்ளது. தற்போது அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிக்க ஆரம்பித்துள்ளது. வடக்கில் சிவில் நிர்வர்கத்தை ஸ்தாபித்து நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளாமையே இந்த நிலைமை ஏற்படுவதற்கான காரணம் எனத் தெரிவித்துள்ளார்.

# இன்பருட்டி கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை வங்கியின் கடன் உதவிகள்



(வடமராட்சி)

இலங்கை வங்கி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்களை வழங்கி வரும் நிலையில் இன்பருட்டி கிராமத்தை முன்னிலைப்படுத்தி இங்குள்ள கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தத் தயாராகவுள்ளோம் என இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ஏ.டி.சுமணசிறி தெரிவித்தார்.

இன்பருட்டி கடற்தொழில் கிராமத்தில் இலங்கை வங்கியினால் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் கடன் உதவித்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இக்கிராமத்தில் உள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் உள்ளனர். இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி புத்துயிர் பெற வழிவகை செய்வதுடன் இலங்கை வங்கி இதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என இன்பருட்டி கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் த.சந்திரதாஸ் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் வங்கி முகாமையாளர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி மீன்பிடித் தொழிலுக்கென உபகரணங்கள் 100 கடற்தொழிலாளர்களுக்கு வங்கியினால் வழங்கப்பட்டுள்ளது.

இங்கு சுயதொழிலுக்கு மட்டுமல்லாது அன்றாடம் தொழில செய்பவர்களுக்கு போக்குவரத்துக்கான கடனுதவி குறிப்பாக மோட்டார் சைக்கிளைப் பெறுவதற்கு மற்றும் மாணவர்களுக்கு கல்விக்கான கடனுதவி என்பவற்றை வழங்கவுள்ளோம். இக்கடனுதவியை இக்கிராம மக்களும் பெறமுடியும்.

நாட்டிலுள்ள இலங்கை வங்கியின் 575 கிளைகளிலும் இருந்து இதுபோன்ற கடன் உதவிகளை எந்தப் பிரஜைகளும் பெற முடியும். மேற்படி உதவிகளைப் பெற வேண்டுமாக இருந்தால் உரிய ஆவணங்களுடன் சென்று இவ் உதவிகளைப் பெற முடியும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை கிளை முகாமையாளர் எஸ்.தர்மராஜா, கடற்றொழில் நீரியல் வளதிணைக்கள பிரதிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன், இன்பருட்டி கிராம அலுவலர் ஆர்.புலேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (116)

# யாழ்ப்பாணம் ரயில் நிலைய விடுதிகளிலிருந்தோர் வெளியேறினர்

(அரியாலை)

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தைச் சூழவுள்ள ரயில் நிலைய விடுதிகளில் குடியிருந்தவர்கள் அனைவரும் வெளியேறியுள்ளனர்.

ரயில் பாதையை ஓமந்தையில் இருந்து திருத்தியமைப்பதற்கான ஆரம்பக்கட்ட வேலைகளை இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் புகையிரத சுற்றாடலில் "கும்சைட்" என அழைக்கப்பட்ட ஸ்ரான்லி வீதிப் பகுதியில் உள்ள ரயில் திணைக்களத்திற்குச் சொந்தமான விடுதி வீடுகளில் குடியிருந்தவர்கள் அனைவரும் அந்த விடுதிகளை விட்டு முற்றும் முழுதாக வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து ரயில் நிலைய ஆணையாளரின் அனுமதியுடன் அதிகாரம் பெற்ற அதிகாரியால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களுக்கமைவாகவே இவர்கள் வெளியேறினர்.

அந்தக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக தமது தங்கும் இடப்பகுதிகளில் உள்ள தற்காலிக அமைப்புக்கள் மற்றும் கட்டுமானங்களையும் அகற்றுமாறு இவர்கள் கேட்கப்பட்டு இருந்தனர். அதற்கிணங்க பிந்திய கட்டுமானங்களும் அகற்றப்பட்டு உரிமையாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டன.

இருந்த பொழுதும் நிரந்தரக் கட்டடங்களை அகற்றி எடுத்துச் செல்லுமாறு எவருக்கும் அதிகாரம் அளிக்கப்படவில்லை என சம்பந்தப்பட்ட வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (23)

## 45 பேருக்கு 20 இலட்சம் தண்டம்

(நெல்லியடி)

கொழும்பிலிருந்து வந்த இலங்கை மின்சார சபை அதிகாரிகளுக்கும், நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி காங்கர உட்பட பொலிஸ் குழுவனரும் இணைந்து சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்டவர்களைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதன்போது கரவெட்டிப் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்ற 45 பேர் வசமாக மாட்டினர்.

குறித்த 45 பேர் மீதும் நெல்லியடிப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய வேளை, இவர்கள் அனைவருக்குமான தண்டப்பணமாக இருபது இலட்சம் ரூபாவை செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.

சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்டவர்களில் பெருமளவானோர் மின்மாணியில் மோசடி செய்தவர்களே அதிகமெனத் தெரிவிக்கப்படுகிறது. (12)



# வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவர்களின் சாதனைக்கு முன்மாதிரி

## வலயக் கல்விப் பணிப்பாளர் புகழாரம்

(வடமராட்சி)

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் வடமராட்சி வலயத்தில் முன்னணிப் பாடசாலையாக விளங்கும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாகாண, தேசிய மட்டங்களில் நிகழ்த்திய சாதனைகள் தொடர்ந்தும் நிலைநாட்டப்பட வேண்டும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்தார்.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் திருமதி வேதராணி நவரட்ணம் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இக்கல்லூரி 1000 பாடசாலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டின் திட்டத்தில் இணைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் இணையும் போது ஆரம்பப்பிரிவு நிறுத்தப்பட வேண்டும் என சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைவாக ஆரம்பப் பிரிவு நிறுத்தப்பட்டது.

இப்பிரதேசத்திலுள்ள மக்கள் மற்றும் கல்விசார் அதிகாரிகளின் தொடர்ச்சியான வேண்டுகோளை அடுத்து இக்கல்லூரியின் ஆரம்பப் பிரிவை நிறுத்தாது புதிய ஆரம்பப் பாடசாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

எனவே இக்கல்லூரி எதிர்காலத்தில் வடமராட்சியின் புகழ்பூத்த தமிழ்ப் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கும் பாடசாலையாகத் திகழ்வதுடன் சிறந்த மாணவ சமூகத்தையும் உருவாக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பேராசிரியர் ந.நடராஜசிங்கம், நெல்லியடி, பருத்தித்துறை பொலிஸ் அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (116)

# செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமாகாணத்தின் சகல வலயங்களிலுள்ள திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வடமாகாண கல்வித் திணைக்களக் கலந்துரையாடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு சகல வலயங்களைச் சேர்ந்த திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (109)

# விதிமுறைகளை மீறிய 19 வர்த்தகர்களுக்கு 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது

யாழ்.மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போது விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட 19 வர்த்தகர்களுக்கு யாழ்.நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தகர்கள் விலைப்பட்டியல் இன்றியும், காலாவதியான பொருட்களை விற்பனை செய்ததுடன், குறிக்கப்பட்ட விலையிலும் பார்க்க கூடுதலான விலைக்குப் பொருட்களை விற்பனை செய்த குற்றத்துக்காக 19 வர்த்தகர்களுக்கு எதிராக அதிகார சபையினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமல் காலவதியான பொருட்களை விற்பனை செய்த 7 வர்த்தகர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 21 ஆயிரம் ரூபா அபராதம் அறவிடப்பட்டுள்ளது.

குறித்த விலையிலும் பார்க்க கூடிய விலைக்குப் பொருட்களை விற்ற 11 வர்த்தகர்களுக்கு தலா 5 ஆயிரம் வீதம் 55 ஆயிரம் ரூபாவும் மேலும் ஒரு வர்த்தகருக்கு 4 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மாவட்ட இணைப்பாளர் எஸ்.சிவசீலன் தெரிவித்துள்ளார். (120)

# சிற்றூர்திகளில் பயணச்சீட்டு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்தி நடத்துநர்கள் பயணக் கட்டணத்துக்கான பயணச்சீட்டு வழங்குவதாகவும் இதனால் பயணக் கட்டணம் குறித்து தாம் சிரமப்படுவதில்லை எனப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

தனியார் பேருந்துகளும் பயணச்சீட்டு வழங்கப்பட வேணடும் என அறிவுறுத்தப்பட்டதற்கமைய சிற்றூர்திகளின் நடத்துநர்கள் பயணச்சீட்டு வழங்குவது வரவேற்கத்தக்க விடயம் எனப் பயணிகள் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.



கோண்டாவில் மேற்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது கும்பாபிஷேகக் குருக்கள் மூலஸ்தான கோபுரம் மற்றும் விநாயக விக்கிரகத்திற்கு நீரூற்றுவதையும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழிபாடுகளில் கலந்து கொண்டிருப்பதையும், பக்தர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (137)

# "நங்கூரம்" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நங்கூரம் நூல் வெளியீடு நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. வடகிழக்கு கல்வி விளையாட்டு பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. யாழ். மாவட்ட காசநோய் வைத்திய நிபுணர் யமுனாநந்தா நங்கூரம் சமுக அறிவியல் நூலை வெளியிட்டு வைக்க பேராசிரியர் குகதாசனின் மனைவி பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து 'சூழல் பொதுஅறிவு' என்னும் தலைப்பில் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற எஸ். சேந்தனனுக்கு 1 பவுண் எடையுள்ள தங்கப் பதக்கத்தினை பேராசிரியர் அன்ரனி நோர்பேட் வழங்கி வைத்தார். (எஸ்)

# அடையாள அட்டை வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணக்கிளையினால் தெரிவு செய்யப்பட்டு யாழ்ப்பாண போதனாவைத்தியசாலையில் தொண்டர்களாகப் பணிபுரியும் 35 தொண்டர்களுக்கு தொண்டர் அடையாள அட்டைகள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்ப்பாணக் கிளைத் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் தலைமையில் கிளை தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணக்கிளை ஆளுநர் சபை உறுப்பினர்கள், பிரிவுத்தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தொண்டர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்கிக் கௌரவித்தனர். (70)

# இணைந்த சமூக செயற்பாட்டிற்கு சாரணர் சங்கங்கள் முன்னுதாரணம்

## – ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல்




(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்கத்தின் நான்கு பிரதேச கிளைகள் இணைந்து நடாத்தும் நூற்றாண்டு நிறைவுக்கான இந்நிகழ்வு மக்களின் நல மேம்பாட்டினை முன்னிறுத்தி பல பகுதிகளையும் சேர்ந்த சமூகநல அமைப்புக்கள் மேற்கொள்ளும் இணைந்த செயற்பாட்டிற்கு சிறந்த முன்னுதாரணமென ஈ.பி.டி.பி. யின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், காங்கேசன் துறை, பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய இடங்களைச் சார்ந்த இலங்கை சாரணர் சங்க கிளைகளின் நூற்றாண்டு நினைவுக்கான நன்றியறிதல் நிகழ்வு நேற்று முன்தினம் நல்லூர் ஆலய வளாகத்தில் இடம் பெற்றபோது அதில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கொணடவாறு தெரிவித்தார்.

குடாநாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த சாரணர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் அமைப்பாளர் கமல் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சமூக சேவைக்கான அமைப்பின் பல பகுதிகளையும் சார்ந்த கிளைச் சங்கங்கள் இந் நிகழ்வை ஏற்பாடு செய்தது போல ஏனைய சமூக நலன் பேணும் அமைப்புக்களும் தமது பிரதேச கிளைகளின் கூட்டான நிகழ் வுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் மக்களுக்கான தம் பணிகளை சிறப் பாக பரந்தளவில் முன்னெடுக்க முடி யும்.

எதிர்காலத்தில் இலங்கை சாரணர் சங்கத்தின் சிறப்பான செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையுடனும் ஒத்துழைப்புடனும் முடிந்தவரை முழுமையாக மேற்கொள்ள எண்ணியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சாரணர் சங்கத்தின் பிரதிப் பிரதம ஆணையாளர் கிராசாளினி உதவிப் பிரதம ஆணையாளர்களான கபில கல்யான பெரேரா மற்றும் டேமியன் சில்வா வடக்கு கிழக்குக்கான உதவிப் பிரதம ஆணையாளர் சரத் மத்தாராய்ச்சி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# இரும்பு பொறுக்கிய மாணவர்கள் பாடசாலைகளில் இணைப்பு



பெற்றோருக்குப் பாடசாலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு சீருடைகளை மறைவிடத்தில் மாற்றி வைத்துவிட்டு இரும்பு பொறுக்கி விற்று அப்பணத்தைக் களியாட்டங்களில் செலவு செய்து வந்த ஒரு தொகுதி மாணவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தெல்லிப்பளை, உடுவில் கோட்டப் பாடசாலைகளில் நடைபெற்றுள்ளதாக வலிகாமம் கல்விவலய முறைசாராக் கல்விச் செயற்திட்ட அலுவலர் வே.அம்பிகைபாகன் அறிவித்துள ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,


கீரிமலைப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் சில மாணவர்கள், வீட்டிலிருந்து புறப்படும்போது, பாடசாலைச் சீருடை, புத்தகப்பை என்பவற்றுடன் புறபபட்டு, பின் சீருடைகளை மறைவிடங்களில் மாற்றிக் கொண்டு புத்தகப்பைகளை மறைத்து வைத்துவிட்டும் இரும்பு பொறுக்கி விற்பனை செய்து பணம் சம்பாதித்து வந்துள்ளனர்.

அப்பணத்தைக் கீரிமலை கடற்கரைக்குச் சென்று செலவழித்து வந்துள்ளனர். மாலையானதும் மீண்டும் சீருடைகளை அணிந்துகொண்டு, பாடசாலை முடிந்துவருவதுபோல் பெற்றோர்களிற்கும் பாசாங்கு காட்டி பெற்றோரை ஏமாற்றி வந்துள்ளனர்.

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விச் செயற்திட்ட அலுவலர், அப்பகுதிப் பாடசாலைகளிற்குச் சென்று இடைவிலகிய மாணவர்களைப் பற்றி அறிந்து அது தொடர்பில் பெற்றோர்களிற்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மேற்கொண்டதன் விளைவாகவே இந்த உண்மை தெரியவந்துள்ளது.

இதன் பின்னர் சம்பந்தப்பட்ட மாணவர்களை இனங்கண்டு அவர்களிற்குக் கட்டாயக் கல்வியின் அவசியம் பற்றி அறிவுறுத்தி அவர்களை மீண்டும் அவர்கள கற்றுவந்த பாடசாலைகளில் செயற்திட்ட அலுவலர் இணைத்துள்ளார். (06)

# மண்கும்பானில் சிரமதானம்



மண்கும்பான் பிரதேசத்தில் நேற்று முன்தினம் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டது. இதில் வேலணை பிரதேச சபை தலைவர் சி. சிவராசா தலைமையில் இச்சிரமதானப் பணிகள் இடம்பெற்றது. (85)

# முரசின் இன்றைய பலன்

(07.02.2012 –செவ்வாய்க்கிழமை)

கர வருஷம் தை மாதம் 24 ஆம் திகதி. பூரணை பின் இரவு 4.17 வரை. நட்சத்திரம் பூசம் பிற்பகல் 2.12 வரை. சித்தயோகம் பூரணை விரதம் தைப்பூசம், இராகுகாலம். 3.35 - 5.05 வரை. சுபநேரம் 11.05 - 12.35 வரை. எமகண்டம் 9.35 - 11.05வரை. குளிகைகாலம் 12.35 - 2.05 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உற்சாகம், வெளியூர் பயணம், அதிர்ஷ்டம், இலட்சுமி கடாட்சம். |
| ரிஷபம் | உறவினர் வருகை, மறைமுக வருமானம், வியாபாரத்தில் மந்தம், வேலை வாய்ப்பு, |
| மிதுனம் | ஞாபக மறதி, இருப்பிட சௌகர்யம், சுபகாரியம், குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| கடகம் | அதிகாரி அனு கூலம், ஸ்திரமான வெற்றி, சுபகாரியத்தடை அகலும், அதிர்ஷ்டம். |
| சிம்மம் | ஸ்திரிகளால் செலவு, ஆசைகள் நிறைவேறும், எதிர்பாராத இலாபம், கல்வியில் சாதனை. |
| கன்னி | ஏமாற்றங்கள், நம்பிக்கைத் துரோகம், பொருள்வரவில் தடை, வேலைவாய்ப்பு. |
| துலாம் | பிரிவு, சகோதரரால் பிரச்சினை, முன்எச்சரிக்கை, கடன் படல், |
| விருச்சிகம் | தொழில் வளம், ஆதாயம் பெருகும், கடன் தீரும், ஆசைகள் நிறைவேறும். |
| தனுசு | புது முயற்சி கூடாது, குடும்பத்தில் மகிழ்ச்சி, பதவி உயர்வு, நினைத்தது நிறைவேறும். |
| மகரம் | பிரயான நன்மை, பொன் பொருள் சேரும், திடீர் பணவரவு, வேலை வாய்ப்பு. |
| கும்பம் | கவனம் தேவை, நினைத்தகாரிய வெற்றி, அலைச்சல், எதிர்நீச்சல். |
| மீனம் | குடும்ப சுகம், பதவி உயர்வு, மருத்துவச் செலவு, நண்பர்கள் உதவி. |

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு 48 ஆயிரம் சேலைன் மருந்துகள் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் சேலைன் மருந்துக்கான தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக தென்னிலங்கையிலிருந்து 48ஆயிரம் சேலைன் மருந்துகள் வந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவ்வைத்தியசாலைக்கென சுகாதார அமைச்சினால் 2ஆயிரம் பெட்டிகளில் 48ஆயிரம் சேலைன் மருந்துகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இவை தற்போது வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையில் சேலைன் மருந்துக்கு நிலவிய தட்டுப்பாட்டினால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இதனையடுத்து வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்ட நடவடிக்கையால் இம்மருந்துகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், இதனால் தற்போது இம்மருந்து தட்டுப்பாடின்றி நோயாளர்களுக்கு தேவையான அளவு பயன்படுத்தப் படுவதாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (எஸ்)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

(வடமராட்சி)

அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 2012ஆம் ஆண்டுக்கான நிர்வாகத்தெரிவும் ஆண்டுப் பொதுக்கூட்டமும் அண்மையில் இடம்பெற்றது.

இதில் புதிய நிர்வாகத்தலைவராக ந.துரைராஜா, உபதலைவராக வி.சுந்தரலிங்கம், செயலாளராக சீ.இரத்தினேஸ்வரன், உப செயலாளராக ம.சபாமணி, பொருளாளராக ச. ஸ்ரீதரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டதுடன், நிர்வாக சபை உறுப்பினராக ந.அரியநாயகம், ம.கணேசலிங்கம், த.காந்தரூபன், பா.பிரதீப், ம.நிதர்சன், க.பரணீதரன், வெ.துஸ்யந்தன், த.இராஜேஸ்வரன், ஸ்ரீ.ஸ்ரீரமணன் க.ஜெயதர்சன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (116)



இந்தியத் தலைவர்களின் வருகைகளைப் போல, அமெரிக்கத் தரப்பின் விஜயங்கள், அறிவிப்புகளைப் போல சீனப் பிரதிநிதிகளும் தலைவர்களும் இலங்கைக்கு அடிக்கடி படையெடுப்பதும் இல்லைளூ விஜயங்களைச் செய்வதும் இல்லை! அறிவிப்புகளை விடுப்பதும் இல்லை.

அபூர்வமாகச் சிலவேளைகளில் இலங்கைக்கு வரும் சீனத்தலைவர்களோ பிரதானிகளோ இலங்கையின் அரசியற் தலைவர்களையும் கட்சிகளையும் சந்திப்பதில்லை. மேலும் இலங்கையின் அரசியலைப் பற்றி வாய் திறப்பதும் இல்லை. அறிக்கைகள் விடுவதும் இல்லை. ஆனால, சீன முதலீடுகளும் உதவிகளும் சீனப் பொருடகளுக்கான



சந்தையும் இலங்கையில் தாராளமாகியுள்ளன.

# யாரை நம்பி நாங்கள்?

இதேவேளை, சீனா இலங்கையை இந்தியாவிடமிருந்தும் மேற்குலகத்திடமிருந்தும் நகர்த்தி தனக்கும் பொதுவான முக்கோணத்தன்மையுடைய ஒரு பொது சமநிலை அரங்கில் நிறுத்தியுள்ளது.

ஆகவே, இன்று சீனா இலங்கையின் நிராகரிக்கவே முடியாத ஒரு பாத்திரமாகத் தன்னை நிலைப்படுத்தியுள்ளது.

சீனாவின் இத்தகைய நிலைப்படுத்தலைச் சமாளிப்பதற்கும் இதைச் சிதைப்பதற்கும் இந்தியா நிச்சயமாக இலங்கையின் உள்விவகாரங்களையே கையாளும். இதையே நாம் முன்னரும் பார்த்திருக்கிறோம்.

எனவே, இன்று இலங்கையில் இந்த இரண்டு நாடுகளின் ஆதிக்கப்போட்டி பகிரங்கமாக நடைபெற்று வருகின்றது. இரண்டு யானைகள் மோதும்போது செடிகளே சேதமடைவது என்று சொல்வார்கள்.

ஏறக்குறைய அத்தகைய ஒரு நிலையே இந்தப் பிராந்திய நாடுகளுக்கிடையிலான பிராந்திய ஆதிக்கப் போட்டியாகி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்தப் போட்டியில் - அல்லது இந்த மோதுகையில் எப்படி இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மையும் பொருளாதார மேம்பாடுகளும் அமைதியும் இனங்களுக்கிடையிலான பிணக்குகள் தீர்வதும் சாத்தியமாகும்?

பிராந்தியச் சக்திகளின் பின்னணியில் மேலும் சர்வதேச வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டியும் நலன் சார்ந்த நிகழ்ச்சி நிரல்களும் உள்ளன.


இவற்றையெல்லாம் வென்று நாட்டைப் பாதுகாக்கக் கூடிய சாணக்கியம் யாருக்குண்டு? இந்த நிகழ்ச்சி நிரல்களுக்குச் சமதையான நிகழ்ச்சி நிரல்களை உருவாக்கிக் காய்களை நகர்த்தி இலங்கை மக்களைக் காப்பாற்றக்கூடிய ஆற்றல் எவரிடம் இருக்கிறது? அல்லது, உள்நாட்டரசியலை தமது நலன்களுக்காகக் கையாள அனுமதிக்காத ஒரு நிலையை ஏற்படுத்தக் கூடிய செயற்றிறன் யாரிடம் உள்ளது?

இவையெல்லாம் இல்லாத பட்சத்தில் எதிர்காலத்தில் இலங்கையில் இன்னும் பல ஆதிக்கச் சக்திகள் தங்களின் செல்வாக்கு மண்டலத்தை விரிவாக்கம் செய்வது தவிர்க்க முடியாமற்போகும்.

வெளியாரின் கொலைக் களமாக உங்களின் முற்றம் இருந்தால் அது எப்படி இருக்கும் என்பதை இதற்கு மேல் இங்கே விவரிக்கத் தேவையில்லை என நினைக்கிறேன்.

*- அரவிந்தன் கட்டுரையிலிருந்து*

# மூழ்கிய சொர்க்கத்தின் ஏலம்!




"மூழ்கவே மூழ்காத மிதக்கும் சொர்க்கம்" என, புகழப்பட்ட சொகுசுக் கப்பலான டைட்டானிக், 1912 இல் வடக்கு அட்லாண்டிக் கடலில், பனிப்பாறையில் மோதி கடலுக்குள் மூழ்கியது. உலக மக்களை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கிய இவ்விபத்தில் 1,500 இற்கும் மேற்பட்டோர் பலியாயினர்.

சில ஆண்டுகளுக்குப் பின், கடலியல் ஆராச்சியாளர்கள் நடத்திய ஆய்வில், டைட்டானிக் கப்பலின் உடைந்த பாகங்கள், கப்பலில் இருந்த பொருட்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டன.

வரும் ஏப்ரல் 15 ஆம் திகதியுடன் டைட்டானிக் கப்பல் கடலில் மூழ்கி நூறாண்டுகள் ஆகிறது. இந்த நூற்றாண்டு விழாவை நினைவுகூரும் வகையில், கப்பலில் இருந்து மீட்கப்பட்ட பொருட்களை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது.

கப்பலின் உடைந்த பாகங்கள், கப்பலில் பயணித்த பெண்கள் வைத்திருந்த மேக்-அப் சாதனங்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள், கரன்சி நோட்டுகள் ஆகியவை ஏலத்தில் முக்கிய இடம் பெறவுள்ளன. இவை பல கோடி ரூபாய்க்கு ஏலம் போகும் என எதிர்ப் பார்க்கப்படுகிறது.

# 2012 ஒஸ்கார் விருதுக்கான படங்கள் ஒரு பார்வை




ஹொலிவுட்டின் மிகப் பெரிய வருட நிகழ்வு ஒஸ்கார் விருதுகள் விழா. இந்த வருடம் பெப்ரவரி 26 ஆம் திகதி, கலிபோர்னியாவில் உள்ள ஹொலிவுட் நகரத்தில் உள்ள கொடாக் தியேட்டரில் நடைபெற இருக்கும் விழாவில் 2011 இல் வெளிவந்த திரைப்படங்களில் ஒஸ்கார் விருது பெற்ற படங்கள் அறிவிக்கப்படும். சுமார் 24 போட்டிப் பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படும். அதில் சிறந்த படங்களுக்கான போட்டி யில் பரிந்துரைக்கப் பட்டிருக்கும் படங்கள் இவை:



**The Artist**


மிக்கேல் ஹஸானாவிசியஸின் இயக்கத்தில் வெளிவந்திருக்கும் இது ஒரு மௌனப்படம். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா. பெரும் பாராட்டுதல்களைப் பெற்ற படம். 1927 களில் மௌனப்படக் காலத்தில் மிகப் பிரபலமாக இருக்கும் ஒரு ஹீரோ நடிகர் ஒலி அமைப்பு கொண்ட பேசும் படங்களின் வருகையால் தனது வாழ்க்கையில் ஏற்படும் சரிவை சரிசெய்ய ஒரு நடன நடிகையுடன் இணைந்து புது முயற்சி செய்கிறார்.

அவர் என்னவானார் என்பது தான் இந்தத் திரைப்படம். கமல்ஹாசனின் பேசும் படம் இது போன்ற ஒரு முயற்சியே. முயற்சிகளின் வித்தியாசத்தை திரையில் பாருங்கள். சிறந்த படம், நடிகர், இயக்குநர், ஒளிப்பதிவு உட்பட 10 ஒஸ்கார் விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**The Descendants**

அலெக்ஸாண்டர் பெய்னே (Alaxandar Payne) இயக்கத்தில் வந்திருக்கும் குடும்ப உறவுகள் பற்றிய படம். ஜோர்ஜ் க்ளூனி ஒரு ரியல் எஸ்டேட் பணக்காரர். இன்னாருவருடன் காதல் உறவிலிருந்த தனது மனைவி படகு விபத்தில் கோமா நிலைக்குப் போயவிட, அதிகம் தொடர்பேகொண்டிராத தனது இரு மகள்களுடன் திரும்பச் சேர்ந்து, தனது மனைவியின் காதலனைச் சந்திக்கச் செல்கிறார். இந்தப் பயணத்தில் தன்னை மூன்றாம் மனிதன் போல் கருதும் மகள்களுடன் மீண்டும் சேர்ந்து வாழ்க்கையின் அர்த்தத்தை உணர முயலுவதைப் பற்றிய படம் இது. சிறந்த நடிகர், இயக்குநர், ஒளிப்பதிவாளர் உட்பட 5 பிரிவுகளில் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

**Extremely loud and incredibly close**



ஸ்ரீபன் டால்ட்ர் (Stephen Daldry) இயக்கியுள்ள படம். செப்டெம்பர் 9.11 தாக்குதலில் தனது தந்தையைப் பறி கொடுத்த 9 வயதுச் சிறுவனுக்கு அவனுடைய தந்தையின் அலுமாரியிலிருந்து கிடைக்கும் ஒரு புதிரான சாவிக்கான பூட்டைத் தேடுகிறான். நிறைய கண்ணீர் மல்க வைக்கும் காட்சிகள் கொண்ட படம். இரண்டு ஒஸ்கார்களுக்குப் பரிந்துரைக்கபபட்டுள்ளது.

**The Help**

டாடே டெய்லர் இயக்கியுள்ள இப்படம் 1960களில் நடக்கும் கதை. நிறவெறிகள் நிரம்பிய காலத்தில் ஒரு புத்தக ஆசிரியர் கறுப்பினப் பெண்கள் தாங்கள் வேலை செய்யும் வெள்ளைக்கார சீமான்களை என்ன கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள் என்பதை புத்தகமாக எழுத எண்ணுகிறார். மிசிசிபி நகரில் அப்படி வேலை செய்யும் கறுப்பினப் பெண்களை பேட்டி கண்டு எழுத முயலும் போது வெளிவரும் எதிர்பாராத விஷயங்கள் பற்றிய படம்.

**Hugo**

புகழ் பெற்ற இயக்குநர் மார்ட்டின் ஸ்கார்சிஸ் இயக்கத்தில், மர்மம் நிரம்பிய 3D படம். 1930 களில் நடக்கும் கதை. ரயில்வே ஸ்டேஷனில் வாழ்க்கையைக் கழிக்கும் ஒரு அனாதைச் சிறுவனின் இறந்த தந்தை மற்றும் ஒரு ரோபோட்டைச் சுற்றியிருக்கும் மர்மங்கள் பற்றியது. இயக்குநர், ஒளிப்பதிவாளர், எடிட்டிங், ஆர்ட் டைரக்ஷன், இசை உட்பட 11 ஒஸ்கார் விருதுகளுக்குப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.



**Midnight in Paris**

புகழ் பெற்ற இயக்குநர் வூடி ஆலன் (woody Allen) இயக்கிய குடும்ப உறவுகள் பற்றிய படம். இவருடைய படங்கள் பெரும்பாலும் உறவுகளை உளவியல் பார்வையில் அலசும் விதமாக இருக்கும். இப்படத்தில் தாய் தந்தையருடன் தற்செயலாக பரீசுக்கு சுற்றுலா போகும் ஜில், இனெஸ் தம்பதியினர் திருமணத்திற்குப் பின் பரீசில் குடியேறத் திட்டமிடுகின்றனர். பரீசில் நடு இரவில் வாக்கிங் போகும் ஜில் தனது வாழ்க்கையைப் பற்றி புதிதாக ஏதோ உணர்வுகள் வரப் பெறுகிறான். சிறந்த படம் உட்பட 4 ஒஸ்கார் விருதுகளுக்குப் பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

**Moneyball**

பராட் பிட் (Brad Pitt) நடித்து வெளிவந்துள்ள படம். ஒரு பேஸ்போல் க்ளப்பை குறைந்த முதலீட்டில் வெற்றிகரமாக நடத்திக்காட்டிய ஒரு நிர்வாகியின் முயற்சிகள் பற்றிய கதை.

ஆறு ஒஸ்கார்களுக்குப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

**The tree of life**

புகழ்பெற்ற இயக்குநர் ரெறன்ஸ் மாலிக் (Terrance Mallick) இயக்கத்தில் ப்ராட் பிட் (Brad Pitt) நடித்து வந்துள்ள படம். ரெறன்ஸ் மாலிக் படங்களில் கதை என்பது ஒரு களம் மட்டுமே. பெயருக்கு கதை என்ற ஒன்றைச் சொல்லலாம். மற்றபடி இவருடைய படங்கள் பெரும்பாலும் பார்வை அனுபவங்களாக மட்டுமே உணரப்பட முடிபவை. 1950 களில் வாழ்ந்த மூன்று சகோதரர்களின் இளமைப்பருவமும் அவர்கள் தனது குழந்தைத்தனமான அறியாமையை இழந்த கணங்களையும் பதிவு செய்யும் படம். ஒளிப்பதிவு, இயக்குநர் மற்றும் சிறந்த படங்களுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**war horse**

புகழ்பெற்ற இயககுநர் ஸ்ரீபன் ஸ்பீல் பெர்க் இயக்கியது. முதலாம் உலகப் போர் காலத்தல் வாழ்ந்த ஒரு இளைஞனுக்கும அவனுடைய உயிரான வளர்ப்புப் பிராணியான ஒரு குதிரைக்கும் நிகழ்ந்த நிகழ்வுகள் பற்றிய படம். அல்பேர்ட் என்கிற அந்த இளைஞன் ஆசையாய் வளர்த்த குதிரை ஜோயியை வறுமையால் அவனுடைய தந்தை இராணுவத்தின் குதிரைப் படைககு வற்றுவிடுகிறார். அதைத் தேடிச் செல்லும் அல்பேர்ட் இராணுவத்தில் சேர்கிறான். அவன் குதிரைக்கு என்ன ஆனது. அவர்கள் சந்தித்தார்களா என்பதே படம். ஸ்பீல் பெர்க்கின் சேவிங் ப்ரைவேட் ரியானின் குதிரை வடிவம் தான் இந்தப் படம் என்கிறார்கள். வழக்கம் போல் படம் கச்சிதம். ஆறு ஒஸ்கார் விருதுகளுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவற்றில் எந்தப் படம் சிறந்த பட விருதை தட்டிச் செல்லும் என்பது பல விஷயங்களைப் பொறுத்தது ஒஸ்காரில் நடக்கும் அரசியல் உட்பட. இவற்றில் பெருமபாலான படங்கள் கடந்த காலத்துப் பின்னணியில் எடுக்கப்பட்டுள்ளன. பின்லேடன் மரணம், ஆப்கானிஸ்தானில் இராணுவம், இரட்டை பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மைப் பெருக்கம், கைப்பற்றுவோம் வோல்ஸ்ட்ரீட் போராட்டங்கள் போன்ற நிகழ்கால விஷயங்கள் ஏதாவது சினிமாவில் வந்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

The Artist சிறந்த படமாக விருது வாங்கும் என்பதே அதிகம் பேச்சு.

*- ஷாலினி பிரபாகர்*

# கடற்புலிகளின் தளபதி சூசையின் மனைவி சத்தியதேவி மனம் திறந்து பேசுகிறார் - 2



:சாமரா லக்ஷன் குமார:

*(நேற்றைய தொடர்ச்சி...)*

கேள்வி: வடக்குக்கு வெளியே கொழும்பைப் போன்ற இடங்களில் என்ன விடயங்கள் நடைபெறுகின்றன என்கிற தகவல்களை அறியக்கூடிய வழிகள் உங்களுக்கு இருந்தனவா?

பதில்: நாங்கள் தொலைக்காட்சிகளைப் பார்த்து அப்படியான விடயங்களை அறிந்து கொள்வோம். சில வேளைகளில் சூசை வீட்டுக்கு வரும் போது தெற்கில் இருந்து வெளியாகும் செய்திப் பத்திரிகை ஒன்றை வழக்கமாகக் கொண்டு வருவார்.

கேள்வி: யுத்தம் ஒரு ஆபத்தான கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை எப்போது நீங்கள் அறிந்தீர்கள்?

பதில்: ஆரம்பத்திலிருந்தே நாங்கள் அச்சத்துடன்தான் வாழ்ந்து வந்தோம். இறுதிக்கட்டத்தில் நாங்கள் பதுங்கு குழிகளை விட்டு வெளியேறினால் எந்த வித மாற்றமுமில்லாமல் காயமடைவோம் என்பதை நாங்கள் நன்கு



அறிந்திருந்தோம். விடயம் அத்தகைய மோசமான நிலைக்கு வந்துவிட்டது.

கேள்வி: யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின்போது நீங்கள் புதுக்குடியிருப்பிலிருந்து வெளியேற விரும்பினீர்கள். ஏன?

பதில்: நாங்கள் அந்த இடத்தை விட்டு வெளியேற விரும்பியது, மே 12 இல். அந்த நேரத்தில் அதிக அளவிலான மக்கள் ஒரு சிறு பகுதி நிலப்பரப்பினுள் அடைபட்டுக் கிடந்தார்கள் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ யின் தோல்விக்கு அது தெளிவான சான்றாக அப்போது தோன்றியது. நாங்கள் எங்கள் மகள் சிந்துமணியையும் மற்றும் மகன் கடலரசனையும் சூசையின் மூத்த சகோதரனின் மனைவி மற்றும் பிள்ளையுடன் ஒரு படகில் அந்த இடத்தைவிட்டு வெளியே அனுப்ப முடிவு செய்தோம். ஆனால், நான் மற்றவர்களை விட்டுச் செல்ல முடிவெடுக்கவில்லை, ஏனெனில் சூசை அப்படிச் செய்வதை விரும்பவில்லை. ஆனால் இறுதியாக நான் எனது பிள்ளைகளுடன் செல்வது என முடிவெடுத்தேன். சூசை அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. இறுதிவரை தான் போராடப்போவதாக தெரிவித்த சூசை பினனர் வெளியேறுவதற்காக எங்களுக்கு ஒரு படகினை வழங்கச் சம்மதித்தார்.

கேள்வி: அந்தப் படகிலேறி எங்கே செல்ல விரும்பினீர்கள்?

பதில்: எங்களுக்கு இரண்டு இலக்குகள் இருந்தன. ஒன்று முடியுமானால் இந்தியாவுக்கு தப்பிச் செல்வது ஆனால், இதன்போது நாங்கள் ஆழ்கடலில் சிறிலங்கா கடற்படையினரின் கப்பல்களை எதிர்கொள்ள நேரிடும். கடற்படையினரிடம் பிடிபடுவதைப் பற்றி நாங்கள் சிந்திக்க விரும்பவில்லை, அனால் எங்கள் எண்ணமெல்லாம் எங்'கள் பிள்ளைகளின் பாதுகாப்பிலேயே இருந்தது. நாங்கள் மே 12 ஆம் திகதி வெளியேற தீர்மானித்தாலும் உக்கிரமடைந்த யுத்த நிலைமை எங்களை பதுங்கு குழிகளுக்குள்ளேயே தங்கியிருக்க வைத்தது. எனவே கடைசியாக நாங்கள் மே 14 ஆம் திகதியே வெளியேறினோம்.

கேள்வி: மே 12 ஆம் திகதி பிரபாகரனையும் அவரது குடும்பத்தினரையும் நீங்கள் புதுக்குடியிருப்பில் வைத்து காணவில்லையா?

பதில்: ஆம் அவர்கள் அங்கேதான் இருந்தார்கள், நாங்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறும் வரை அவர்கள் அங்கே பத்திரமாக இருந்தார்கள்.

கேள்வி: அந்த இடத்தை விட்டு வெளியேறுவதற்கு முன்பு அவர்களுடன் பேசினீர்களா?

பதில்: நான் அவர்களுடன் பேசவில்லை, ஆனால் சிலவேளைகளில் நாங்கள் வெளியேறுவதைப்பற்றி சூசை அவர்களிடம் சொல்லியிருக்கலாம்.

கேள்வி: பிரபாகரன் அடைபட்டுக் கிடந்த மக்களுடன் இருந்தாரா அல்லது அவர்களிடமிருந்து வேறுபடுத்தப்பட்டு இருந்தாரா?

பதில்: அந்த இறுதிக்கட்டத்தின் போது அவர்களுக்காக எந்த ஒரு தனியான இடமும் இருந்திருக்கவில்லை, ஆனால் அவர்களுக்கு உயர்ந்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

கேள்வி: அவரை விட்டுப் பிரியும் முன்பு சூசை என்ன சொன்னார்?

பதில்: நான் கடைசியாக அவரைப் பார்த்தது, மே 12 இல். ஆனால் மே 14 இல் நாங்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறும்போது நான் அவரைக் காணவில்லை. நாங்கள் அன்றுதான் வெளியேறுகிறோம். என்பதை அவர் அறியவில்லை, எங்களுக்கென்று தனியான பதுங்கு குழிகள் எதுவும் இருக்கவில்லை அதனால் நாங்கள் மற்றவர்களுடன் ஒரு பதுங்கு குழியினைப் பகிர்ந்து கொண்டோம்.

கேள்வி: நீங்கள் வெளியேறுவதற்கு முன்னதாக சூசை எங்கேயிருக்கிறார் என்பதை அறிய நீங்கள் முயற்சி செய்யவில்லையா?

பதில்: நாங்கள் முகம் கொடுத்துக் கொண்டிருந்த சூழலில் அதைச் செய்ய முடியவில்லை. யுத்தமானது அநேகமாக ஒரு கைப்பிடியினுள் அடங்கும் நிலையை எட்டியிருந்தது. நாங்கள் எங்களுக்குத் தெரிந்த ஒரு எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தினரிடம், நாங்கள் வெளியேறுவதை சூசையிடம் தெரிவிக்கும்படி சொன்னோம். இரவு 9 மணியளவில் புறப்பட்டோம். நாங்கள் 12 பேர்கள் அந்தப் படகில் இருந்தோம் ஆனால் படகு தாக்கப்படும் வரை எங்களால் சுமார் 4 நிமிடம் மட்டுமே பயணம் செய்ய முடிந்தது.

கேள்வி: பின்னர் என்ன நடந்தது?

பதில்: அதை இயக்கிக் கொண்டிருந்த நபரை அவர்கள் தாக்கியபோது அவர் குண்டடிபட்டு படகினுள் விழுந்தார். படகின் பல இடங்களிலும் துவாரம் ஏற்பட்டு அதனுள்ள நீர் வர ஆரம்பித்தது. நாங்கள் நீரை வெளியேற்றிக் கொண்டிருந்தபோது சுமார் 20 நிமிடங்கள் கழித்து ஒரு சிறிய கடற்படைப் படகு எங்களை அணுகியது. சிலர் கொட்டியா கொட்டியா எனச் சத்தமிடுவதை நான் கேட்டேன் மற்றும் அவர்கள் எங்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வார்களோ என நாங்கள் அஞ்சினோம். அந்த நிமிடத்தில் ஒரு பெரய படகு உறுதியான வெளிச்சத்தை பாய்ச்சியபடி எங்களை நோக்கி வந்தது. சூசையின் சகோதரரின் மனைவி றூபனின் கைக்குழந்தையை உயர்த்திக் காட்டினார். சிறிய படகில் இருந்த மனிதர்கள் எங்களை நெருங்கி வந்து எங்களுடன் தமிழில் பேசினார்கள். "பயப்பட வேண்டாம் நாங்கள் உங்களைக் காப்பாற்றுவோம்" என அவர்கள் சொன்னார்கள். பிறகு அவர்கள் எங்களை அவர்களது படகுகளில் ஏற்றி கரைக்கு கொண்டு வந்தார்கள்.

கேள்வி: நீங்கள் சூசையின் மனைவி என்பதை அவர்கள் அடையாளம் கண்டு கொண்டார்களா?

பதில்: உடனடியாக இல்லை. எனது இரண்டு பிள்ளைகளையும் சூசையின் சகோதரரின் மனைவியுடையது என்று கூறினேன். எனது சொந்த விருபத்தின்படி தனிமையாக்கப்பட்ட நான், றூபனின் தூரத்து உறவினர் என அவர்களிடம் கூறினேன். நாங்கள் புறப்படும் முன்பே நாங்கள் கடற்படையினரிடம் அகப்பட நேர்ந்தால் இவ்வாறு பேச வேண்டும் என முன்கூட்டியே திட்டமிட்டிருந்தோம். எப்படியாயினும் சூசையின் சகோதரரின் மனைவி தனது காலிலுள்ள காயமொன்றுக்கு மருந்து போட என்னுடன் மருத்துவ நிலையத்தை நோக்கி சென்று கொண்டிருந்த வேளையில் முதலாவது சோதனைச் சாவடியை நாங்கள் கடந்தபோது கடற்படையினரிடம் சரணடைந்திருந்த எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர் ஒருவர் என்னைச் சுட்டிக் காட்டி நான் சூசையின் மனைவி என்பதை சொல்லிவிட்டார். உடனடியாகவே பெரும் எண்ணிக்கையிலான கடற்படை வீரர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டனர். இரண்டாவது தடவையாக நான் மற்றவர்களிடமிருந்து வேறாக்கப்பட்டேன். நான் ஏன் எல்.ரீ.ரீ.ஈ பிரதேசத்தை விட்டு வெளியேறினேன் என்றும் நான் எங்கு போக எண்ணியிருந்தேன் என்றும் என்னிடம் வினவினார்கள். கடற்படையினர் என்னை தடுக்காவிட்டால் நான் இந்தியாவுக்குச் செல்ல எண்ணியிருந்ததாக நான் அவர்களிடம் சொன்னேன். இந்தியாவை அடைந்ததும் அங்கிருந்து லண்டனில் உள்ள எனது சகோதரருக்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தி ஏதாவது ஏற்பாடுகளைச் செய்திருப்பேன் என கடற்படையினரிடம் தெரிவித்தேன்.

கேள்வி: கடற்படையினர் சூசையைப் பற்றி உங்களிடம் விசாரிக்கவில்லையா?

பதில்: எனக்கு சூசையின் தொலைபேசி இலக்கம் தெரியுமா என அவர்கள என்னிடம் வினவியபோது எனக்குத் தெரியாது என அவர்களிடம் நான் கூறினேன். ஆனால் எனது சகோதரரின் தொலைபேசி இலக்கத்தை அவர்களிடம் கொடுத்தேன்.

கேள்வி: சூசை ஒரு தொலைபேசியை பயன்படுத்தியதில்லை என்றா சொல்ல வருகிறீர்கள்.

பதில்: அவர் ஒன்றைப் பயன்படுத்தி வந்தார். ஆனால், மே 12 ஆம் திகதி கடைசியாக நான் அவரைச் சந்தித்த போது அவரிடம் தொலைபேசி எதுவும் இருக்கவில்லை.

கேள்வி: மே 12 ஆம் திகதி எல்.ரீ.ரீ.ஈ யுத்தத்தில தோற்கடிக்கப்படும் என்பதை, சூசை அறிந்திருந்தார் என்று உங்களுக்குத் தெரியுமா?

பதில்: யுத்தத்தில் நாங்கள் வெல்வோமா அல்லது தோற்போமா என்பதை அவரிடம் கேட்பதற்கு எங்களுக்கு நேரம் இருக்கவில்லை. அவ்வளவு குறுகிய நேரச் சந்திப்பு. ஒரு எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர் எங்களை அவரிடம் கூட்டிச் சென்றபோது நாங்கள் அங்கே நிற்கிறோம் என்பதைக் காணமட்டுமே அவரால் முடிந்தது. அந்தச் சமயத்தில் இராணுவத்தினர் வெகு சமீபத்தில் வந்து விட்டதால் வெகுநேரம் எங்களால் அங்கு நிற்க முடியவில்லை.

கேள்வி: கடற்படையினர் உங்களை அடையாளம் கண்டு கொண்டபின் என்ன நடந்தது?

பதில்: எங்களை அவர்களது முகாமுக்கு கொண்டு சென்றார்கள். எங்கள் படகில் துவாரங்கள் ஏற்பட்டு நீர்க்கசிவு ஏற்பட்டதால் படகினை இலகுவானதாக்க நாங்கள் எங்கள் பொதிகள் யாவற்றையும் தூக்கி எறிந்து விட்டோம் மற்றும் நாங்கள் அப்போது உடுத்திருந்த உடைகள் மட்டுமே எங்களிடம் இருந்தது. கடற்படையினர் எங்களுக்கு உடைகளை வழங்கினார்கள்.

கேள்வி: உங்களது தற்போதைய வாழ்க்கையைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?.

பதில்: நாங்கள் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டதும், எனது பிள்ளைகளும் நானும் தனித்தனியாக பிரிக்கப்பட்டு தடுத்து வைக்கப்படுவோமோ என எண்ணி நான் ஆழமாக அச்சமடைந்திருந்தேன். ஆனால் திரும்பிப் பார்க்கும் போது நாங்கள் நலமாகவே உள்ளோம்.



கேள்வி: நீங்கள் நலமாக உள்ளீர்கள் என்று கூறுவதால் நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

பதில்: அது இப்படித்தான். நாங்கள் எங்களுக்கு உரியது என நம்புவதிலும் அதிகம் வசதிகள் எங்களுக்கு கிடைத்துள்ளன. பிள்ளைகள் பாடசாலை மற்றும் பூங்கா என்பனவற்றுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். நானும் அவர்களுக்கு துணையாகச் செல்கிறேன். ஆனால் நாங்கள் எங்கள் சொந்த பந்தங்களைப் பார்ப்பதற்கும் மற்றும் வேறு இடங்களுக்கு செல்வதறகும் அனுமதிக்கப் படுவதில்லை என்பதை எண்ணும்போதுதான் நான் துக்கப்படுகிறேன்.

கேள்வி: உங்கள் உறவினர்கள் உங்களுடன் பேசினார்களா?

பதில்: என்னுடைய சகோதரரும் தந்தையும் லண்டனில் வசிக்கிறார்கள். தொலைபேசி மூலம் அவர்கள் என்னுடன் பேசுவார்கள். அவர்கள் ஒருமுறை என்னைக் காண வந்திருந்தார்கள்.

கேள்வி: உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?

பதில்: எனது இரண்டு பிள்ளைகளுக்கும் முறையான கல்வி வழங்கப்பட்டால் அதுவே எனக்குப் போதும். மற்றும் அவர்கள் படிப்பதற்கு வேண்டிய வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

கேள்வி: உங்கள் தினசரி வாழ்க்கை முறை என்ன?

பதில்: நான் காலை 4.30 மணிக்கு எழுந்து எனது பிள்ளைகளுக்கு உணவு தயாரித்து அவர்களை பாடசாலைக்கு அனுப்புகிறேன் அதன் பின்னர் நான் துவைத்தல், வீட்டுச் சாமான்களை அடுக்கி வைத்தல் போன்ற வேலைகளைச் செய்வேன். வெளியே கோவில் மற்றும் பூங்கா என்பனவற்றுக்குச் செல்கிறேன். இரவில் வேலை ஏதுமின்றி இருந்தால் தொலைக்காட்சிகளை ரசிப்பேன்.

கேள்வி: மிக முக்கியமான ஒன்றை உங்களிடம் கேட்க மறந்து விட்டேன். நீங்கள் கடற்படையின் படகுகளால் வழி மறிக்கப்பட்டபோது உங்களிடம் 2 கிலோகிராம் தங்கம் மற்றும் ரூபா 600,000 பணம் என்பன உங்களிடம் இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தளவுக்கு தங்கமும் பணமும் ஏன் கொண்டு சென்றீர்களா?

பதில்: என்னிடம் அவ்வளவு பணம் இருக்கவில்லை, ஆனால் என்னுடையது 200,000 ரூபா. மற்றும் றூபனின் மனைவியுடையது 200,000 ரூபா. எங்களோடிருந்த மற்றொருவருடைய பணம் 175,000 ரூபா என்பனவே மொத்தப்பணமும். எல்லா தங்க நகைகளும் என்னுடையதல்ல, ஆனால் எங்கள் மூவருக்கும் சொந்தமானது. என்னுடைய தங்க நகைகள் எனக்கும் எனது குழந்தைகளுக்கும் பலராலும் பரிசுகளாக வழங்கப்பட்டவைகளாகும்.

கேள்வி: உங்களைச் சுற்றி யுத்த அழிவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கையில் இவ்வளவு தங்கத்தையும் எப்படி உங்களால் வைத்துச் சமாளிக்க முடிந்தது மற்றும் தப்பி ஓடும்போது ஏன் அவற்றைக் கொண்டு சென்றீர்கள்?

பதில்: நான் தங்கங்கள் யாவற்றையும் ஒரு பெட்டியில் போட்டு நாங்கள் போகுமிடமெல்லாம் அதைக் கொண்டு செல்வேன், எனது பிள்ளைகளுடையதும் மற்றும் என்னுடையதும் எதிர்காலத்துக்கு பயன்படும் என்கிற எண்ணத்தில்தான்.

*- நன்றி: த நேசன்*

# ஈரான் பிரச்சினையைக் காரணம்காட்டி எரிபொருள் விலை உயரலாம்?

## கனியவள தேசிய சேவை சங்கம்

(கொழும்பு)

ஈரான் பிரச்சினையைக் காரணம் காட்டி எரிபொருட்களின் விலைகளில் அதிகரிப்புக்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக கனியவள கூட்டுத்தாபன தேசிய சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

ஈரானுக்கு, அமெரிக்கா விடுத்துள்ள பொருளாதார தடையைக் கொண்டு இலங்கையில் எரிபொருட்களின் விலையை அதிகரிக்க அரசு முனைவதாக அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை ஈரானிடம் இருந்து 70 ஆம் கணக்கு முதல் எரிபொருள் கொள்வனவு செய்வதாகவும் அது இடைநிறுத்தப்பட்டால் இரு விடயங்களின் கீழ் பிரச்சினை ஏற்படும் எனவும் அந்தச் சங்கத்தின் தலைவர் ஆனந்த பாலித குறிப்பிட்டுள்ளார். அதனால் எரிபொருட்களின் விலையில் அதிகரிப்பை மேற்கொள்ள நேரிடும் என அவர் கூறியுள்ளார்.

# மீனவர்களை மீட்பதற்கு மூன்றாம் தரப்பின் உதவி



(கொழும்பு)

சோமாலியக் கடற்கொள்ளையர்களால் சிறைபிடிக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்காக மூன்றாம் தரப்பொன்றின் உதவியை நாடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தலையிடுமாறு சோமாலிய கடற்தொழில் அமைச்சரின் நெதர்லாந்து ஆலோசகரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக கடற்தொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கு சாதகமான பதில் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

நிமேஷாதுவ என்ற படகு ஆறு மீனவர்களுடன் கடந்த வருடம் செப்டம்பர் மாதத்தில் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக நீர்கொழும்பிலிருந்து கடலுக்குச் சென்றிருந்தது.

குறித்த மீனவர்களை விடுவிப்பதற்கு சோமாலியக் கடற்கொள்ளையர்கள் ஆறு மில்லியன் டொலர்களைக் கப்பமாக கோரியுள்ளதாக குறித்த படகின் உரிமையாளர் நிஹால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

# இலவசக் கல்விக்கு எதிராக யுத்தம் செய்கிறது அரசு

## ரணில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலவசக் கல்விக்கு எதிராக தற்போது, அரசாங்கத்தினால் யுத்தமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அம்பாந்தோட்டை - முல்கிரிகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சியின் செயற்பாட்டாளர்களின் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகம் மீது தாக்குதல்களை மேற்கொண்டவர்களுக்கு தற்போதைய நிர்வாகத்தைப் பற்றி கதைப்பதற்கு உரிமை இல்லை என்றார்.

கட்சித் தலைவரின் தலைமையில் முல்கிரிகல பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜித் பிரேமதாச மற்றும் திலீப் வெதஆராய்ச்சி ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

எனினும், குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் தங்காலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பின்தங்கிய கிராமங்களுக்கு திருமலையில் மின்சார வசதி

(திருகோணமலை)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட உதவியுடன் திருகோணமலை-ஈச்சிலம்பற்றுப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட லங்காபட்டுன மற்றும் கரமுனை ஆகிய கிராமங்களுக்கான மின்வழங்கல் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

20 இலட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தினை பிரதியமைச்சர் எம்.கே.ஏ. டி.எஸ்.குணவர்தன ஆரம்பித்து வைத்தார். இதன்மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடையவுள்ளன.

## தெற்கில் மழை; மின்னல் அபாயம்

(கொழும்பு)

தெற்கில் இடியுடன் கூடிய மழை காரணமாக மின்னல் ஏற்படுவதற்கான அபாயம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாதுகாப்பான நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மின்னல் தாக்கங்களினால் ஏற்படும் பாதிப்புக்களை தவிர்த்துக்கொள்ள முடியும் என திணைக்களத்தின் கடமைநேர வானிலை நிபுணர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் இலத்திரனியல் உபகரணங்களின் பயன்பாட்டை தவிர்த்துக்கொளவதன் ஊடாகவும், மைதானங்கள் போன்ற திறந்தவெளி பிரதேசங்களில் நிற்பதை தவிர்த்துக்கொள்வதன் ஊடாகவும் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே கொட்டாவ, பின்ஹேன, கெமுனுபுர பிரதேசத்தில் மின்னல் தாக்கத்தினால் பல வீடுகளில் இருந்து இலத்திரனியல் உபகரணங்கள் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு 7.20 அளவில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தினால் சுமார் 15 வீடுகளில் இருந்த இலத்திரனியல் உபகரணங்கள் பழுதடைந்துள்ளன.

# வயலுக்குச் சென்றவர் மர்ம மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விற்பனை மடுப் பிரதேசத்தில் வயலில் வேளாண்மைக் காவலுக்காகச் சென்ற ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளார். வந்தாறுமூலையைச் சேர்ந்த பி.விஜயராசா (வயது-57) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். வான் சாரதியாகக் கடமையாற்றிய இவர் பின்னர் உழவு இயந்திரச் சாரதியாகத் தொழில் செய்து வருவதுடன், வயல் வேலைகளிலும ஈடுபட்டு வந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலை வயல் வாடிக்குச் சென்ற இவரின் சகோதரர், மேற்படி நபர மரணமடைந்துள்ளதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை காலை சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டதுடன், சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காகச் செங்கலடி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

வயல் பிரதேசங்களில் யானைகளின் தொல்லைகளும் அதிகமாகும். ஆனால், இவரது மரணம் எவ்வாறு இடம்பெற்றதென்பது குறித்து எதுவும் தெரியவில்லையென இவரது சகோதரர் கூறினார். இது தொடர்பில் கரடியனாறு பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்

# வாசனைத் திரவிய மாநாடு இலங்கையும் பங்கேற்கும்

(கொழும்பு)

வடஇந்தியாவின் பூனேயில் இடம்பெறவுள்ள சர்வதேச இந்திய வாசனைத் திரவிய மாநாட்டில் இலங்கையும் பங்குகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் 200 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு மற்றும் 250 இற்கும் மேற்பட்ட இந்திய வர்த்தகர்களும் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

11 ஆவது வருடமாக இடம்பெறும் இந்த வாசனைத் திரவிய பொருள் மாநாட்டின் மூலம் மேலதிக ஏற்றுமதி வர்த்தக கட்டளைகள் கிடைக்கும் என இந்திய வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாநாட்டில் கனடா, நெதர்லாந்து, இலங்கை, சுவீடன், பெரிய பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, மலேசியா, தென்னாபிரிக்கா, சிரியா, அவுஸ்ரேலியா, சீனா உட்பட ஏராளமான நாடுகள் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்காக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதிநிதியாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக எட்டப்பட வேண்டுமென ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கலந்து கொள்ளாமை தொடர்பில் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

சர்வதேசத்திடம் சென்று முறைப்பாடு சொல்வதனை விடவும், நாட்டின் அதி உயர் நிர்வாகப் பீடமான நாடாளுமன்றில் கருத்துக்களை முன்வைப்பது முக்கியமானது.

அனைத்துக் கட்சிப் பேரவை அமர்வுகள் போர் இடம்பெற்ற காலத்திலேயே முன்னெடுக்கப்பட்டன. தற்போது யுத்தம் நிறைவடைந்துள்ளது.

போர் இடம்பெற்ற சூழ்நிலைகள் வேறு தற்போதைய நிலைமைகள் வேறு என்பதனை அரசியல் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாட்டின் மொத்த சனத்தொகையில் 4 வீதமான மக்களை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் ஹெல உறுமய குறிப்பிட்டுள்ளது.



# தனியார் மருத்துவக் கல்லூரிகள்; இந்தியாவில் ஆராய்கிறது ஐ.தே.க.



(கொழும்பு)

இந்தியாவில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை ஆராய்வதற்கு ஐ.தே.க. தீர்மானித்துள்ளது. இலங்கையின் தனியார் மருத்துவக் கல்லூரிகள் விடயத்தில் தனது நிலைப்பாட்டை வகுப்பதற்காக இந்த ஆய்வை ஐ.தே.க. மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

இதற்காக ஐ.தே.க.வின் பிரதிப் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன புதுடில்லிக்குச் சென்றுள்ளார்.

இந்தியாவில் சுகாதார முறைமை இயங்கும் விதத்தையும் தனியார் துறையின் பங்களிப்பையும், தான் ஆராயவுள்ளதாக ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

இந்தியாவில் இதய சத்திர சிகிச்சைகள் தொடர்பான மருத்துவசேவைகளை இந்தியா எவ்வாறு கையாள்கிறது என்பதையும் ஆராயவுள்ளதாக அவர் கூறினார். மருத்துவத் துறையில் இந்தியா மிக முன்னேறியுள்ளது. இந்திய உபகண்டம் இப்போது மருத்துவ கேந்திரமாக விளங்குகிறது. இந்திய சுகாதார அமைச்சர் குலாம் நபி ஆசாத், மருத்துவ கவுன்ஸில் செயலாளர் டாக்டர் சங்கீதா சர்மா ஆகியோரையும் ஜயலத் ஜயவர்தன சந்திக்கவுள்ளார்.

# மட்டக்களப்பில் மழை; நெல் அறுவடை பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் பெரும்போக நெல் அறுவடை இடம்பெற்றுவரும் நிலையில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் மழையால் விவசாயிகள் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த வருடம் பெரும்போக நெற்செய்கையாளர்கள் அறுவடைக்குத் தயாராகிக் கொண்டிருந்த வேளை ஏற்பட்ட வெள்ளத்தினால் பாரிய நட்டம் ஏற்பட்டிருந்தது. இம்முறையும் மழை காரணமாக முற்றிவளைந்து அறுவடைக்காக தயார் நிலையில் இருந்த நெற்கதிர்கள் நிலத்தில் வீழ்ந்து கிடப்பதால் நெற்செய்கையாளர்கள் நட்டத்தைச் சந்திக்கும் நிலைமை உள்ளதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது.

## டொலருக்கு மாற்று அலகில்லை

(கொழும்பு)

அமெரிக்க டொலர்களுக்கு பதிலாக மாற்று நாணய அலகை பயன்படுத்தி ஈரானுடன் எண்ணெய் வியாபாரத்தில் ஈடுபட முடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த இதனைத் தெரிவித்துள்ளார்

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா பொருளாராத் தடை விதித்துள்ள நிலையில், சிறிய நாடு என்ற அடிப்படையில் இலங்கையால் அவ்வாறான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

# புலிப்பிரசாரத்தை முறியடிப்பதற்கு காத்திரமான பொறிமுறை அவசியம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னாண்டோ

(கொழும்பு)

புலிகளின் பிரசார நடவடிக்கைகளை முறியடிக்க காத்திரமான பொறிமுறையொன்று அவசியமானது என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

சில வெளிநாட்டு அரசியல் வாதிகள் ஈழப் பிரசாரத்தை மேற்கொண்டுவருகின்றனர்.

வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சில அரசியல்வாதிகள் இவ்வாறு பிரசாரம் செய்து வருகின்ற னர்.

புலி ஆதரவாளர்களுடன் முன்னாள் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபான்டுக்குத் தொடர்பிருந்தமையை விக்கிலீக்ஸ் அம்பலப் படுத்தியிருந்தது.

புலிகள் தோற்கடிக்கப்படும் வரையில் குற்றச்செயல்களுக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென எவரும் கோரவில்லை.

அரசாங்கத் தரப்பினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகத்தெரிவிக்கும் தரப்பினர் புலிகளின் குற்றச் செயல்கள் தொடர்பில் கருத்து வெளியிடுவதில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை எதிர்ப்பது அரசியல் சாசன மீறலாகும் -டிலான் பெரேரா!

13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை எதிர்ப்பதானது அரசியல் சாசனத்தைமீறும் நடவடிக்கையாகும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். பதுளையில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்து கொண்ட போதுஅவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தொிவிக்கையில், 13 ஆம் திருத்தச் சட்ட மூலம் நாட்டின் அடிப்படைச் சட்டங்களில் ஒன்றாகும். அதனை எதிர்ப்பது அர்த்தமற்றது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். சகல விடயங்களையும் எதிர்க்கும் நடவடிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இவ்வாறான நடவடிக்கை நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சர்வதேச சமூகம் இலங்கைக்கு எதிராக அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். நட்பு நாடுகளின் ஒத்துழைப்புடன் இந்த சதித்திட்டங்களை முறியடிக்கமுடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# டோகோ தடுப்பு முகாமிலிருந்து 28 பேர் நாடு திரும்பியுள்ளனர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக கனடாவுக்கு செல்ல முயன்ற நிலையில் மேற்கு ஆபிரிக்க நாடான டோகோவிலுள்ள தடுப்பு முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 203 இலங்கையர்களில் 28 பேர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நாடுக்கு வந்தடைந்துள்ளனர். சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பு, கனடா அரசாங்கம் மற்றும் இலங்கை உயர் ஸ்தானிகராலயம் போன்றன இணைந்தே மேற்படி குழுவினரை இலங்கைக்கு மீண்டும் அழைத்து வர நடவடிக்கை எடுத்துள்ளன. கடடுநாயக்கா சர்வ்தேச விமான நிலையத்தை வந்தடைந்த இவர்களில் மூன்று பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

சட்டவிரோதமாக கனடாவுக்கு செல்ல முயன்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட இரு நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கையர்கள், மேற்கு ஆபிரிக்க நாடான டோகோவிலுள்ள தடுப்பு முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# மாணவர்களின் பற்சுகாதாரம் பேண பாடசாலைகளில் நிலையங்கள்!

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் பற்சுகாதாரத்தைப் பெறும் வகையில், மூன்று பாடசாலைகளில் பற்சிகிச்சை நிலையங்கள் இயங்கி வருகின்றன என வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

அளவெட்டி அருணோதயாக்கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூாி, வட்டு. இந்துக்கல்லூரி ஆகிய மூன்று முக்கியமான பாடசாலைகளிலுமே பற்சிகிச்சை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

எமது வலயத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் பற்சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகள் ஊள்ள மாணவர்கள் இந்த நிலையங்களிற்குச் சென்று இலவசமாகச் சிகிச்சையினைப் பெற்றுகொள்ள முடியும். இதற்குப் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களையும், பெற்றோர்களையும் வழிப்படுத்த வேண்டும் எனவும் அறிவித்துள்ளார். (06)

# கொங்கோ ஜனாதிபதியுடன் அமைச்சர் பீரிஸ் பேச்சுவார்த்தை




(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட பிரதிநிதியாக, ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள இங்கை வெளிவிவார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், கொங்கோ ஜனாதிபதி டெனிஸ் சாஸோவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கொங்கோ நாட்டு ஜனாதிபதியுடன் இருதரப்பு உறவுகள் மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து அமைச்சர் பீரிஸ் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கொங்கோவிற்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இராஜதந்திர உறவுகளை ஆரம்பிப்பது தொடர்பில் கொங்கோ வெளிவிவகார அமைச்சர் பெசில் இகுசுபேயுடன் ஒப்பந்தமொன்றை அமைச்சர் பீரிஸ் கைச்சாத்திட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கொழும்பு கங்காராம பௌத்த விகாரையின் வருடாந்த நவம் பெரஹரவில் கலந்துகொள்ளவுள்ள யானைகளை மக்கள் பார்வையிட ஆரம்பித்துள்ளனர்.

# சரணாலயத்தில் சட்டப்படி வேலை; சுற்றுலாப் பயணிகள் பாதிப்பு

(கொழும்பு)

யால சரணாலயத்தை பார்வையிடுவதற்காகச் சென்றிருந்த சுற்றுலாப் பயணிகள் வனஜீவ ராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அகில இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் சங்கம் மேற்கொண்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட விடுமுறை நாட்கள் என்பதால் நேற்றுமுன்தினம் ஆறு மணிமுதல் யால சரணாலயத்தை பார்வையிடுவதற்காக பெருமளவிலான உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் சென்றிருந்தனர்.

இதனைத் தவிர வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் சிலரும் சரணாலயத்திற்குள் பிரவேசிப்பதற்காக நுழைவாயிலில் நீண்டநேரம் காத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் சட்டப்படி வேலை தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக சுற்றுலாப் பயணிகள் பல மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக சங்கத்தின் தலைவர் பிரபாத் கருணாதிலக தெரிவித்துளாார.

# இன்று இலங்கை வருகிறார் சுப்பிரமணிய சுவாமி

(கொழும்பு)

இந்திய பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் சுப்ரமணியம் சுவாமி இன்று இலங்கை வரவுள்ளார். இலங்கையின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரசாங்கத்தின் சிரேஸ்ட அதிகாரிகள் ஆகியோருடன் சுப்ரமணியம் சுவாமி பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்களுக்கு தனியான நிர்வாக அலகு அவசியம் எனக் கடந்த காலங்களில் சுப்ரமணியம் சுவாமி வலியுறுத்திருந்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்சில் அமர்வுகளுக்கு முன்னதாக அவர் இலங்கைக்கு விஜயம் செய்வதனால் பல்வேறு ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. எனினும், அவரின் இலங்கை விஜயத்திற்கான சரியான நோக்கம் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

# நாட்டைச் சீர்குலைப்பதற்கு சில தொழிற்சங்கங்கள் முயற்சி

## வீடமைப்பு அமைச்சர்

(கொழும்பு)

சில தொழிற்சங்கங்கள் நாட்டைச் சீர்குலைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்குலக நாடுகளிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்களே இவ்வாறு நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த முயற்சித்து வருகின்றனர்.

சர்வதேச ஊடகங்களில் தங்களைப் பிரபல்யப்படுத்திக் கொள்ளும்நோக்கில் சில தொழிற சங்கங்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

எனினும், அண்மைக்காலமாக தொழிற் சங்கங்களினால் நடத்தப்பட்டுவரும் போராட்டங்கள் வெற்றியளிக்கவில்லை.

மேற்குலக நாடுகளின் சதித் திட்டத்திலிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டியது சகல பிரஜைகளினதும் கடமையாகும் என்றார்.

# ஊடகங்கள் சித்திரிப்பது போன்று அரசியலில் ஈடபடமாட்டேன்

## ஹிருணிகா

(கொழும்பு)

ஊடகங்களில் சித்திரிக்கப் பட்டது போன்று தான் அரசியலில் மும்முரமாக ஈடுபடப் போவதில்லை என பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

"நான் ஒரு அரசியல் கட்சியில் அங்கத்துவத்தை பெற்றது உண்மைதான். இது தீவிர அரசியலில் ஈடுபடுவதாகாது. தீவிர அரசியலுக்கு எதிர்காலத்தில் வருவேன் என நான் பல தடவை கூறியுள்ளேன். ஆனாலும் அது இப்போது நடைபெறாது."

"எனது தந்தையின் மரணத்தின் பின் மக்கள் என்னை அதிகம் அறிந்துவருகின்றனர். எனது ஒவ்வொரு நடவடிக்கையும் கூர்ந்து அவதானிக்கப்படுகின்றது. சில சமயம் இது திரித்துக் கூறப்படுகிறது" என ஹிருணிகா தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு கபே அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

இதுவரை தேர்தல் நடத்தப்படாதுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு, புதுகுடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கு விரைவில் தேர்தல் நடத்துமாறு கபே இயக்கம் தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த பகுதிகளில் போதியளவான மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக கபே இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடத்துவது குறித்து அதில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகள், குழுக்களிடம் தேர்தல்கள் செயலகம் ஏற்கனவே கலந்துரையாடியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்ளவென அப்பகுதியில் இருப்பவர்களின் வாக்குரிமையை பாதுகாக்க தேர்தல்கள் செயலகம் முன்வர வேண்டும் என கீர்த்தி தென்னகோன் குறிப்பிட்டுள்ளார்.

# நன்னீரில் மீன், இறால் வளர்ப்பு சாத்தியமாகும் வாய்ப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசம் தொண்டைமானாறு கடல்நீர் ஏரி மற்றும் குளங்களில் நன்னீர் மீன் வளர்த்தல், நன்னீர் இறால் வளர்த்தல் சம்பந்தமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசங்களில் நன்னீர்மீன், நன்னீர்இறால் வளர்ப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் இதன்மூலம் இந்தப் பிரதேச கடற் றொழிலாளர்கள் பயன்பெறக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாகவும் ஆய்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தொண்டைமானாறு கடல்நீர் ஏரியில் செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணிவரை நீர்ப் பரிசோதனை செய்த குழுவினர், நீரில் ஐந்து வீதமான உப்புத் தன்மை இருப்பதாகவும் சில இடங்களில் அதற்குக் குறைவாக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில் பகுதிகளிலுள்ள பெரிய குளங்களில் நீர்ப்பரிசோதனையின்போது உப்புத்தன்மை பூச்சியமாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்டனர்.

தொண்டைமானாறு கடல்நீர் ஏரியில் ஆழ்கடல் உப்புநீர் கலக்காமல் அணை போடப்பட்டமையே நன்னீராக மாறியமைக்குக் காரணம் எனவும் குறிப்பிட்டதுடன். நன்னீர்மீன், நன்னீர் இறால் வளர்ப்புக்குச் சாதகமாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

இது சம்பந்தமான ஆய்வுகள், நீர்ப்பரிசோதனைகள், நடைமுறைப்படுத்தப்படுவது சம்பந்தமான திட்டங்கள் யாவும் முடிவடைநததும் கடல்நீர் ஏரியிலும், குளங்களிலும் நாலு இலட்சம் தொடக்கம் ஐந்து இலட்சம் வரையான திலாப்பியா, பாலமீன் குஞ்சுகளை விடவிருப்பதாகவும், ஆறு மாதங்களின் பின்பே இவைகள் அறுவடை (பிடிப்பதற்கு) செய்வதற்கு அனுமதிக்கப்படுமெனவும் நன்னீர் மீன்பிடித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தக் குழுவினர் , கோப்பாய்ப் பிரதேச செயலர் ம.பிரதீபன், கரவெட்டிப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் கே.ஜெயசீலன், வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் ந.திருலிங்கநாதன் ஆகியோரை அலுவலகங்களில் நேரில் சந்தித்து இந்தத் திட்டத்தின் நோக்கம் பற்றி விளக்கமளித்து அவர்களின் ஒத்துழைப்பையும் கோரியிருந்தனர்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆலோசகர் சேந்தன் டீ.சில்வா, நன்னீர் மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜே.ஏ.அத்துல, யாழ். மாவட்ட நீரியல் உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன், தாளையடி கடற்றொழில் பரிசோதகர் வி.கலிஸ்ரன், வடமராட்சி கிழக்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கொ.அ.ஸ்ரனிலாஸ், வடமராட்சிக் கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பிரதிநிதி க.சூரியகுமாரன் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வல்வெட்டித்துறை அமைப்பாளர் க.தெய்வேந்திரம் ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். (70)

# வரலாற்றில் இடம்பிடிக்கும் 2012/2013 ஆம் ஆண்டு



(கொழும்பு)

2012/2013 ஆம் ஆண்டு வரலாற்றில் இடம்பெறும் ஆண்டாக அமையும் எனவும் விரைவில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியை அமைக்கும் எனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள் சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளதாக லங்கா சி நிவ்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தி தொடர்ந்து குறிப்பிட்டுள்ளதாவது,

கஷ்டமான யுகம் ஒன்றுக்கு நாங்கள் முகம் கொடுக்கவேண்டி வரும். அதேபோன்று மிகவும் குறுகிய காலத்தில் எங்களது அரசாங்கத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் அமைப்பதற்கு பங்களிப்பு செய்யவேண்டி வரும். 2012/2013 என்பது வரலாற்றில் பதியப்படும் ஆண்டாக அமையும்.

இன்னும் ஒரு வருட காலத்தில் நாங்கள் திரும்பிப் பார்க்கும் போது, இதற்காக இதற்காக ஐக்கிய தேசிய கட்சி எவ்வாறு அடித்தளமிட்டது என்பதை வரலாறு எழுதும் என்றார்.

# மருத்துவரை நஞ்சு வைத்துக் கொல்ல மற்றொரு மருத்துவர் சதி முயற்சி


(கொழும்பு)

செவனகல வைத்தியசாலையில் பிரதான மருத்துவ அதிகாரியான டாக்டர் சமிந்த விதாரணவின் உத்தியோகபூர்வ இல்லத்தின் தண்ணீர் தாங்கியில் நஞ்சு கலந்து அம்மருத்துவரையும் அவரின் குடும்பத்தினரையும் கொலை செய்வதற்கு முயற்சித்த குற்றச்சாட்டின் பேரில் வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ் வைத்தியசாலையில் பணியாற்றும் மற்றொரு வைத்தியரின் கோரிக்கையின் காரணமாக அத்தண்ணீர்த் தாங்கியில் தான் பல தடவை நஞ்சு கலந்ததாக கைது செய்யப்பட்ட சிற்றூழியர் ஒப்புக்கொண்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தையடுத்து அப் பகுதியில் திரண்ட பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் சர்ச்சைக்குரிய மற்றைய மருத்துவரை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு வலியுறுத்தினர்.

டாக்டர் விதாரண, எந்த நேரத்திலும் நோயாளர்கள் அணுகக் கூடிய மருத்துவராக பிரபலமானவர் எனவும் தனியார் மருத்துவமனைகளை நடத்தும் மருத்துவர்களுக்கு அவர் சவா[illegible] இருந்தார் எனவும் அம்மக்கள் தெரிவித்தனர்.



இச்சம்பவத்தில் தொடர்புடையதாக கூறப்படும் மருத்துவர் தலைமறைவாகியுள்ளதாக செவனகல வைத்தியசாலையின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறினார்.

இந்த நஞ்சுகலந்த நீரை அருந்துபவர்கள் 3-4 மாதங்களின் பின்னரே இறப்பார்கள் எனவும் அதனால் இதை செய்வதற்கு அஞ்சத்தேவையில்லை எனவும் நஞ்சு கலக்க கோரிய மருத்துவர் கூறியதாக அச்சிற்றூழியர் தெரிவித்துள்ளார்.

# 1 மணிநேரம் கிணற்றில் வாழ்ந்த ஒரு வயதுக் குழந்தை

(கொழும்பு)



ஒரு மணித்தியாலமாக தேடிக்கொண்டிருந்த ஒரு வயதுக்குழந்தை கிணற்றிலிருந்து உயிருடன் மீட்கப்பட்ட சம்பவமொன்று மூதூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பிற்பகல் 2 மணியளவில் பிள்ளையைக் காணவில்லையென தாய் கதறியழுது ஒரு மணித்தியாலமாக தேடிக்கொண்டிருந்த போது பின்னர் தனது வீட்டுக்குச் சொந்தமான கிணற்றில் அக் குழந்தையை உயிருடன் மீட்டதாகத் தாய் தெரிவித்தார். ஆறு அடி ஆழமான கிணற்றில் 4 அடி தண்ணீர் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

ஒரு வயதுக் குழந்தையான சஜி ஈச்சிலம்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை அரசினர் பொது வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறது. குழந்தைக்கு எதுவித ஆபத்தும் இல்லையென வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை மீளவும் ஆரம்பிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு - தூத்துக்குடி பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்காக புதிய கப்பல இயக்குநரை இலங்கை தேடி வருகிறது.

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட இக்கப்பல்சேவை சில மாதங்கள் இயங்கியபின் பொருளாதார மற்றும் சட்டச்சிக்கல்கள் காரணமாக நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட ஸ்கோஷியா பிரின்ஸ் கப்பல் சேவை சட்டச் சிக்கல்கள் மற்றும் இலாபமின்மை ஆகிய காரணங்களால். இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் இச்சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஆர்வமுடையவர்களை விருப்பம் தெரிவிக்கக்கோரி, இலங்கையிலும் இந்தியாவிலும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபன அதிகாரி யொருவர் கூறியுள்ளார்.

இந்த விண்ணப்பத்திற்கா[illegible] முடிவுதினம் பெப்ரவரி 20 ஆம் திகதியெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய நிறுவனமொன்று தமது சேவைகளுக்காக இக்கப்பல் நிறுவனம் வழங்க வேண்டிய 15 மில்லியன் ரூபாவை வழங்கா திருப்பதாக கூறி வழக்குத் தொடுத்தது. அதையடுத்து இவ் விவகாரத்தில் தீர்வு ஏற்படும் வரை இக்கப்பலை கொழும்பு துறைமுகத்தில் தடுத்துவைக்கு மாறு வணிக நீதிமன்றமொன்று உததரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரசின் நிலை அறிய தெரிவுக்குழு தேவை



(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைப்பதற்கு முதல் அரசாங்கத்தின் தெளிவான நிலையை அறிந்துகொள்ள தெரிவுக் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் ஒரு இணக்கப்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியது அவசியம்.

அரசுடன் இணைந்துள்ள சில கட்சிகள் தேசிய பிரச்சினை விடயத்தில் கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ளதாகவும் ஒருவருக்கொருவர் விமர்சனம் செய்து கொள்ளும் நிலையை காண முடிகிறது.

இவ்வாறிருக்கையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பது கேலிக்குரிய விடயம் எனத் தெரிவித்தார்.

# உடலுக்கு தீ மூட்டிய யுவதி மரணம்



(கொழும்பு)

கொழும்பு - கிராண்ட் பாஸ் பகுதியில் இளம் யுவதி ஒருவர் தன் உடலுக்கு தீ வைத்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை தனது உடலுக்கு தீ வைத்துக் கொண்ட குறித்த பெண் உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த குறித்த யுவதி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

கிரான்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளம் யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# வேலையை வினைத்திறன் மிக்கதாக்க உத்தியோகத்தர்களுக்கு வாழும் கலைப்பயிற்சி

வலிகாமம் கல்வி வலய உத்தியோகத்தர்களுக்கான வாழும் கலைப் பயிற்சி கடந்த 1, 2, 3 ஆம் திகதிகளில் மாகாணக் கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றிருந்தது.

வாழும் கலைப் பயிற்சியின் தந்தையான குருஜி ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரின் சிஷ்யரான க.குமரன் அவர்களால் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த இருவருடங்களாக இலங்கையில் தங்கியிருந்து வாழும் கலைப் பயிற்சியினை இலங்கையின் பல பாகங்களிலும், குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வழங்கி வருகின்றார்.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சி, வலிகாமம் யாழ். நகர்ப்பகுதிகளில் உள்ள கல்வி வலய உத்தியோகத்தர்கள், வங்கி ஊழியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் இப் பயிற்சியினைப் பெற்று வருகினறனர்.

இந்த வாழும் கலைப் பயிற்சியின் மூலம், மன இறுக்கம், உடல் இறுக்கம், பல்வேறு விதமான நோய்கள் என்பன ஒருவரிடமிருந்து அற்றுப்போகும் எனப் பயிற்சியாளர் க.குமரன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தலையிடி, நீரிழிவு. பீனிசம், மலட்டுத்தன்மை, ஆஸ்துமா, இதய நோய்கள் என்பன அற்றுப் போகும் எனத் தெரிவித்துள்ளார்.

வாழும் கலைப் பயிற்சியினைப் பெற்றுக்கொண்டுள்ள பயிற்சியாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

வீட்டிலும், காரியாலயத்திலும் வேலைப்பளு அதிகமுடைய எங்களைப்போன்ற குடும்பப் பெண்களுக்கு வாழும் கலைப் பயிற்சி பெரும் நன்மையளிப்பதாக உள்ளது. இப் பயிற்சியினைப் பெற்ற பின்னர் எங்களிடத்திலிருந்த மன அழுத்தம், இறுக்கம், கோபம், உடற்சோர்வு, தலையிடி என்பன எங்களை விட்டுக் கழன்றுள்ளதாக உணர்கிறோம்.

மறுபுறம் உடல், உளம் உற்சாகமாகவும், புத்துணர்ச்சியுடனும் காணப்படுகின்றன என்றனர். வேலைகளை வினைத்திறனுடன ஆற்ற முடிகிறது எனவும் வலிகாமம் வலய பெண் பிரதம எழுதுவினைஞரான திருமதி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும் எம்மைப்போன்ற உத்தியோகத்தர்கள் மட்டுமன்றி குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் இந்த வாழும் கலைப் பயிற்சியை மேற்கொண்டால், முரண்பாடுகளற்ற நோய்நொடிகளற்ற அமைதியான வாழ்க்கையை வாழமுடியும் எனத் தெரிவித்தார். (06)

# நவஜீவன்ஸ், திருவள்ளுவர், கழுகுகள் மென்பந்து துடுப்பாட்டத்தில் சம்பியன்

(வடமராட்சி)

இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால் 5,7,16 பந்துப் பரிமாற்றச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் குஞ்சர்கடை கொலின் விளையாடடுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 5 ஓவர்கள் கொண்ட சுற்றுப்போட்டியில் நவஜீவன்ஸ் அணி சம்பியனாகவும், 2ஆம் இடத்தை ஞானம்ஸ் அணியும் பெற்றுக் கொண்டன. இதில் சிறந்த ஆட்ட நாயகனாக நவஜீவன்ஸ் அணியைச்சேர்ந்த பிரியந்தனும், பவர் ஓவ் த மான் ஆக ஞானம்ஸ் அணியைச் சேர்ந்த சுகேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

7 ஓவர்கள் கொண்ட சுற்றுப் போட்டியில் திருவள்ளுவர் அணி சம்பியனாகவும், 2ஆம் இடத்தை ஐங்கரா அணியும் பெற்றுக் கொண்டது. இதில் சிறந்த ஆட்ட நாயகனாக திருவள்ளுவர் அணியைச் சேர்ந்த ரஜீத் பெற றுக் கொண்டார்.

16 ஓவர் கொண்ட சுற்றுப் போட்டியில் கம்பர்மலை நெற்கொழு கழுகுகள் அணி சம்பியன் பட்டத்தையும், 2ஆம் இடத்தை மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகமும் பெற்றுக் கொண்டன. இதில் சிறந்த ஆட்ட நாயகனாக கழுகுகள் அணியைச் சேர்ந்த கோகுலனும், தொடர் ஆட்ட நாயகனாக கழுகுகள் அணியைச் சேர்ந்த செந்தூரனும் சுப்பர் கீரோவாக ஸ்ரீமுருகன் விளையாடடுக் கழகத்தைச் சேர்ந்த அரிகரனும், சிறந்த களத்தடுப்பாளராக கழுகுகள் அணியைச் சேர்ந்த கிருசாந்தனும் பெற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மா.முரளியும் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர், ப.அனுராகாந்தன், குஞ்சர்கடை இராணுவப் பொறுப்பதிகாரி பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர். (12)

# மெய்வன்மைப் போட்டி

(வடமராட்சி)

குடத்தனை கரையூர் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை இல்லமென்வன்மைப் போட்டியும் பெயர்ப் பலகை திறப்பு விழாவும் எதிர்வரும் 8 ஆம திகதி பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் மு.கதிர்காமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரி (உதயன்) அவர்கள் பிரதம அதிதியாகவும், மருதங்கேணிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.பொன்னையாவும், வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளரும் பருத்தித்துறைப் பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் குடத்தனை வடக்கு கிராம அலுவலர் க.பாலசுந்தரம்,அமெரிக்கன்மிசன் திருச்சபையின் பங்குத் தந்தை புவியரசரும் சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.(116)

# அவுஸ்ரேலிய அணியில் பென் ஹில்பென்ஹோஸ்

முத்தரப்பு தொடருக்கான அவுஸ்ரேலிய அணிக்கு வேகப் பந்துவீச்சாளர் பென்ஹில் பென் ஹோஸ் அழைக்கப்பட்டுள்ளார். ...பாதைக்குள்ளான வேகப் பந்து வீச்சாளர் பிரட்லீக்கு பதிலாக இந்திய அணிக்கெதிரான தொடரில் சிறப்பாக செயற்பட்ட அவர் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள இலங்கை அணிக்கெதி ரான போட்டியில் ஹில் பென்ஹோஸ் விளையாடுவார் என அணியின் தேர்வாளர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை, இந்திய மற்றும் அவுஸ்ரேலிய அணிகள் பங்குபற்றும் மும்முனை கிரிக்கெட் தொடர் அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வருகின்றது.

விளையாட்டு செய்திகள்

# யுவராஜ் சிங்குக்கு புற்றுநோய்



இந்திய அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான யுவராஜ் சிங்கிற்கு புற்றுநோய் இருபபது உறுதி செய்யப்பட்டுள்ளது.

நுரையீரல் கட்டி காரணமாக சிகிச்சை பெற ஒரு மாதத்துக்கு முன்பு யுவராஜ் அமெரிக்கா சென்றிருந்தார். அங்கு அவரைப் பரிசோதித்த டாக்டர்கள், யுவராஜ் சிங்கிற்கு இருப்பது நுரையீரல் கட்டி அல்ல புற்றுநோய் என உறுதி செய்துள்ளனர்.

இதையடுத்து தற்போது போஸடன் புற்றுநோய் ஆராய்ச்சி மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

யுவராஜுக்கு நுரையீரலில் கட்டி இருப்பதாக கடந்த ஒக்டோபர் மாதம் கண்டறியப் பட்டது. இதனால்தான் அவர் சமீப காலமாக விளையாடாமல் இருந்து வருகிறார்.

இந்திய அணியின் பல முக்கிய வெற்றிகளுக்கு பேருதவியாக இருந்தவர் யுவராஜ் சிங். 30வயதாகும் யுவராஜ் சிங் இதுவரை 37 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 1775 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

274 ஒருநாள் போட்டிகளில் ஆடி 8051 ஓட்டங்களை எடுத்துள்ளார். யுவராஜ் ஆடிய 20-20 போட்டிகளின் எண்ணிக்கை 23. எடுத்த ஓட்டங்களை 567.

கடந்த உலகக் கோப்பைப் போட்டியில் 15 விக்கெட்டுகளை வீழ்த்திய யுவராஜ் 362 ஓட்டங்களை குவித்திருந்தார்.

4 போட்டிகளில் மேன் ஆப் த மேடசாக தேர்வு செய்யப்பட்டிருந்தார். இதனால் தொடர் நாயகனாகவும் உருவெடுத்தார்.

எத்தனையோ ஆடுகளங்களை அதிரவைத்த யுவராஜ் இந்தப் போது புற்றுநோய்க்கு எதிராக போராடி வருவது கிரிக்கெட் ரசிகர்களை அதிர்ச்சியிலும், சோகத்திலும் ஆழ்த்தியுள்ளது

# ஷேவாக்கிற்கு ஓய்வு தேவை



வீரேந்தர் ஷேவாக்கிற்கு ஓய்வளிப்பதற்காகவே நேற்று முன்தினம் நடைபெற்ற அவுஸ்ரேலியாவுடனான ஒருநாள் போட்டிக்கான இந்திய அணி யில் சேர்க்கப்படவில்லை என இந்திய அணியின் தலைவர் மஹேந்திர சிங்டோனி கூறியுள்ளார்.

இதற்கு காயம் எதுவும் காரணமல்ல. ரோஹித் விளையாட வேண்டுமென்றால் அனுபவமிக்க வீரர் ஒருவர் அணியிலிருந்து விலகியிருக்க வேண்டும். இறுதிக்கட்டத்தில் இப்படி செய்வது கடினமாகும். பயிற்சி இல்லாமல் இத்தொடரின் இடையில் விளையாடுவது ரோஹித்துக்கு கடினமாக இருக்கும். இது மிக நீண்ட தொடராகும்.

ஷேவாக்கிற்கு ஓய்வளிப்பது அணியின் கூட்டுத் தீர்மானம் எனவும் டோனி தெரிவித்தார்.

மெல்பேர்னில் நடைபெற்ற இந்தப் போட்டியில் அவுஸ்ரேலியா 65 ஓட்டங்களால் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

அதிரடி வீரரான ஷேவாக், அணியில சேர்க்கபபடாமை குறித்து பலர ஆச்சரியம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக கருத்துக் கூறுகையிலேயே டோனி இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் மாதம் மேற்கிந்திய அணியுடனான நான்காவது டெஸ்ட் போட்டியில் ஷேவாக் 219 ஓட்டங்களைப் பெற்று புதிய உலக சாதனை படைததார். அந்தத் தொடரின் 5 ஆவது போட்டியில் ஷேவாக் ஓய்வுபெற்றுக் கொண்டார்.

அதன்பின் நேற்றைய போட்டியிலும் அவர் விளையாடவில்லை. அதாவது மேற்படி உலக சாதனையின்பின் இந்திய அணி விளையாடிய ஒருநாள் சர்வதேச போட்டிகள் இரண்டி லும் ஷேவாக் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஸீர்கானுக்கு கணுக்காலில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் இந்தத் தொடரின் கடைசிக் கட்ட போட்டிகளில் விளையாடுவர் எனவும் டோனி கூறினார்.


# ஜடேஜாவுக்கு கிராக்கி



ஐந்தாவது இந் தியன் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டிக்காக, அணிகளுக்கான வீரர்கள் தேர்வில் 146 வீரர்கள் ஏலம் விடப்பட்டார்கள்.

இந்த ஏலப் பட்டியலில் 8 இந்திய வீரர்கள் இடம்பெற்றிருந்தனர்.

இதில் இந்திய அணியில் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜாவை பெறுவதற்கு அணிகள் பெரும் ஆர்வம் காட்டின. இறுதியில் சென்னை சூப்பர் கிங்ஸ், இவரை 9.72 கோடிக்குப் பெற்றது.





வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப்போட்டியில் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் வெற்றிக் கேடயத்தை வழங்குவதையும், பாடசாலையின் கிரிகெட் அணியினரையும் படங்களில் காணலாம்.

# மத்திய அரசுக்கு பக்கவாதம்!

## பா.ஜ.க. கிண்டல்




(சென்னை)

முல்லைப் பெரியாறு, கூடங்குளம், இஸ்ரோ ஊழல், 2ஜி அலைக்கற்றை ஊழல், இராணுவ தளபதியின் வயதுப் பிரச்சினை என எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணாமல் பக்க வாதம் வந்தது போல் மத்திய அரசு முடங்கியுள்ளது என்று பா.ஜ.க. அகில இந்திய செய்தித் தொடர்பாளர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களுடனான சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர், எதிர்க்கட்சியாக உள்ள பா.ஜ.க நாடாளுமன்றத்தில் எழுப்பும் எந்தக் கேள்விக்கும் மத்திய அரசு பதிலளிப்பது இல்லை. அனைத்துப் பிரச்சினைகளும் நீதிமன்றத்துக்குச் செல்கின்றன. நீதிமன்றம் கேட்கும் கேள்விகளுக்கும் மத்திய அரசிடம் இருந்து சரியான பதில் இல்லை எனத் தெரிவித்தார். இதேவேளை தமிழகத்தில் பா.ஜ.க. பலமடைந்துள்ளது.

சட்டப்பேரவை தேர்தலில் அனைத்து கட்சிகளும் தனித்து போட்டியிட்டிருந்தால் பா.ஜ.க. 6 இடங்களில் வெற்றிபெற்று இருக்கும் தனித்து போட்டியிட்டு உள்ளாட்சி தேர்தலில் பா.ஜ.க. 13 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இது பா.ஜ.க. பலம் அதிகரிப்பதைக் காட்டுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்துக் கட்சிகளும் தனித்து போட்டியிட்டால் பா.ஜ.க. அதிக இடங்களைப் பெறும் என மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.




# இந்தியப் பெண்களின் இழிநிலை;

## துணை அமைச்சர் கவலை

(பெங்களூர்)



இந்தியாவில் பெண்களை துர்கா, காளி, லட்சுமி போன்ற தெய்வங்களுடன் ஒப்பிட்டு கௌரவிக்கிறார்களே தவிர, அவர்களுக்கு சுதந்திரம் அளிப்பதில்லை என இந்திய மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் புரந்தேஸ்வரி வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் நடந்த வாழும் கலை நிலைய ஆரம்ப விழாவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நமது நாட்டில் பெண்கள் தாய், தந்தையர், குழந்தைகள் ஆகியோர் அடங்கிய குடும்பத்தினருடன் பாதுகாப்பாக வாழ்வதே நம் சமுதாயத்தின் முக்கிய அம்சம். பெண்களின் வாழ்க்கை தொன்றுதொட்ட காலம் முதல் கண்ணீரில் மூழ்கி உள்ளது. படித்த பெண்களும் இதற்கு விதிவிலக்காக இல்லாவிட்டாலும், தற்கால சூழ்நிலையில் தங்களின் நிலை என்ன என்பதை அறிந்து வருகிறார்கள்.

கல்வி என்றால் மதிப்பெண் தங்கப்பதக்கம் பெறுவது மட்டுமல்ல.பெண்களின் உரிமைக்காக போராடும் சக்தியை பெறுவதே உன்மையான கல்வி. தகவல் தொழில் நுட்பத் துறையில் பணிபுரியும் பெண்கள் கிராமப்புற பெண்களுக்கு உதவுகின்ற வகையில் அவர்களின் மேம்பாட்டுக்கு வழி காண வேண்டும். பெண்கள் ஆண்களைப் போல ஊழல்வாதிகள் அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ராகுலுக்கு பிரதமராவது நோக்கமல்ல;

## தங்கை பிரியங்கா பிரசாரம்

(அமேதி)



பிரதமராவது ராகுலின் நோகக மல்ல என பிரியங்கா தெரிவித்துள்ளார். உத்திரப்பிரதேச சட்ட சபை தேர்தலையொட்டி அமேதி லோக்சபா தொகுதிக் குட்பட்ட பகுதிகளில் நடந்த பிரசார கூட்டங்களில் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து, சோனியாவின் மகள் பிரியங்கா உரையாற்றும் போது, நடக்கும் சட்டசபை தேர்தல் இங்குள்ள வாக்காளர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தேர்தல். தலைவர்களை உருவாக்குபவர்களும் நீங்கள் (வாக்காளர்) தான். அரசாங்கத்தை ஏற்படுத்துபவர்களும் நீங்கள்தான்.

மக்களுக்கு சேவை செய்ய மனம் இல்லாமல், தங்கள் சுயநலத்தை மட்டுமே கொண்டு செயற்படும் தலைவர்களுக்கு, வாக்காளர்கள் பாடம் கற்பிக்க வேண்டும். மக்களுக்காக செயற்படக்கூடிய அரசு அமைய வேணடுமா, அல்லது கட்டடங்கள் கட்டுவதில் கோடிக்கணக்கான ரூபாவை வீணடிக்கக் கூடிய அரசு அமைய வேண்டுமா என்பதை, வாக்காளர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். கடந்த 22 ஆண்டுகளாக, மக்களுக்காக உழைக்காத அரசுகள் தான் உத்திரப்பிர தேசத்தில் அமைந்துள்ளன.

வாக்களிக்கும்போது, மாநிலத்தை மட்டும் மனதில் வைத்துக் கொள்ளாமல், ஒட்டு மொத்த நாட்டின் எதிர்காலத்தை மனதில் வைத்து வாக்களிக்க வேண்டும். பிரதமராவது ராகுலின் நோக்கமல்ல. நமக்கு நேர்மையான சிறந்த பிரதமர் கிடைத்துள்ளார்.

எனவே அடுத்த பிரதமர் யார் என்பது குறித்த பேச்சு தற்போது தேவையற்றது என பிரியங்கா உரையாற்றியுள்ளார்.

# குஜராத்தில் பாகிஸ்தானியர்கள் கைது

(கட்ச்)

குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இரண்டு படகுகளில் சுற்றித்திரிந்த 12 பாகிஸ்தானியர்களை இந்திய எல்லை பாதுகாப்பு படையினர் கைது செய்தனர்.

மாநிலத்தின் கட்ச் மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் பாகிஸ்தானை சேர்ந்த 12 பேர் இரண்டு படகுகளில் சுற்றித்திரிந்ததை அடுத்து அவர்களை கைது செய்து நாராயண் சரோவர் நகரில் உள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களிடம் பல்வேறு பிரிவினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் அவர்கள் வந்த படகுகளை சோதனை செய்யும்போது அதில் மீன்பிடி சாதனங்களைத் தவிர வேறு எவ்வித ஆயுதங்களையும் வைத்திருக்கவில்லை என பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர். பெரும் பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தைச் சேர்ந்தவர்களே கட்ச் பகுதிக்கு வருவதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கடந்த 1ஆம் திகதி மூன்று படகுகளில் வந்த 15 இற்கும் மேற்பட்ட பாகிஸ்தானியர்களைக் கைது செய்வதற்கு முயற்சித்த போது அவர்கள் அனைவரும் தப்பியோடிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அலைக்கற்றை விவகாரம்

# சட்டப்போராட்டத்திற்கு தயாராகும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள்

(புதுடில்லி)

"2ஜி" அலைக்கற்றை ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்ததாகக் கூறி, தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட 122 உரிமங்களை உச்ச நீதிமன்றம இரத்துச் செய்துள்ளதையடுத்து, இதை எதிர்த்து மறு ஆய்வு மனு தாக்கல் செய்வதற்கு சம்பந்தப்பட்ட தொலைத் தொடர்பு நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகினறது.

சட்டப் போராட்டத்தால் பெரிய அளவில் பயன் எதுவும் கிடைக்காது என சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். முதலில் வருபவருக்கே முன்னுரிமை என்ற கொள்கையின் கீழ், கடந்த 2008 ஜனவரியில், "2ஜி" அலைக்கற்றை ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் இதனால் அரசுக்கு 1.76 இலட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாகவும் மத்திய கணக்கு தணிக்கை அலுவலகம் தெரிவித்தது.

இது தொடர்பான வழக்கு சமீபத்தில் உச்ச நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது, அலைக்கற்றை ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்ததாகக் கூறி தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 122 உரிமங்கள் இரத்து செய்யப்பட்டன.

இதேவேளை உச்ச நீதிமன்றின் நடவடிக்கையால் கைத் தொலைபேசிக் கட்டணம் உயரும் என எதிர்வு கூறப்படுகின்றது.

தொலைத்தொடர்பு சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு இடையேயான போட்டி கணிசமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் சில நிறுவனங்கள் "ஜி" உரிமம் பெறுவதற்காக அதிக தொகையை செலுத்தியுள்ளன. இதுபோன்ற சூழ்நிலையால், தற்போது வசூலிக்கப்படும் கட்டணத்தை வைத்து தொடர்ந்து சேவைகளை வழங்குவது மிகவும் சிரமமான காரியமாக இருக்கும்.

எனவே, கைத்தொலைபேசி சேவைக்காக, வாடிக்கையாளர்களிடம் வசூலிக்கும் கட்டணத்தை, கணிசமாக உயர்த்துவதற்கு இந்நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.



# 115 கோடி ரூபா மதிப்புள்ள போதைப்பொருள்

## இந்திய - பாகிஸ்தான் எல்லையில் கண்டுபிடிப்பு

(சென்னை)

இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் 23 கிலோ ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தியா-பாகிஸ்தான் எல்லையான பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் பகுதயில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் ரோந்துப்பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை கோஹா எல்லைப்பகுதியில் 10 கிலோ ஹெரோயினும், பெர்ரோஸ்பூர் எல்லைப்பகுதியில் 13 கிலோ ஹெரோயினும் பறிமுதல் செய்யப்பட்டது. இவற்றின் மதிப்பு சர்வதேச சந்தையில் இந்திய ரூபா 115 கோடி என்று கூறப்படுகிறது.

எல்லைப்பாதுகாப்புப்படை பொலிஸாருக்கு, அமிர்தசரஸ் எல்லையில் சந்தேகப்படும்படியான செயல்கள் நடப்பதாக இரகசிய தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து படையினர் மேற்கொண்ட தேடுதலில் தான் கோஹா எல்லையில் சுமார் 12 அடி நீளமும், 5 அங்குல விட்டமும் கொண்ட குழாய் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதனை சோதித்து பார்த்ததில் ஹெரோயின் பாக்கெட்டுகள் இருநதுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள்தான் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டுள்ளனர். சம்பவ இடத்திற்கு பாதுகாப்புப்படையினர் செல்வதற்கு முன்பாக அவர்கள் தப்பியோடியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேபோன்று பெர்ரோஸ்பூர் எல்லைப்பகுதியில் அதிகாலை 2 மணியளவில் சிலர் எல்லைப்பகுதியில் நடமாட்டம் இருந்துள்ளது. அப்பகுதி நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு பின்னர் அங்கு சென்றபோது 13 கிலோ ஹெரோயின் இருந்துள்ளது எனத் தெரியவருகின்றது.

# 50 கோடி வீடுகள் தேவை

(புதுடில்லி)

இந்தியமக்களுக்கு அடுத்த 10 ஆண்டுகளில் 50 கோடி வீடுகள தேவை என இந்திய தொழிற சாலை மற்றும் வர்த்தக கழக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து, இந்திய தொழிற்சாலை மற்றும் வர்த்தக கழக கூட்டமைப்பின் தலைவர் பிரதீப பூரி தெரிவித்துள்ளதாவது எதிர்வரும் 2050 ஆம் ஆண்டில், இந்தியாவின் சனத்தொகை 170 கோடியாக உயரும். அப்போது நகர்புறங்களில் மட்டும், 90 கோடி மககள் வசிக்கும் நிலை இருக்கும். இதை கணக்கிடும் போது அடுதத 10 ஆண்டுகளில் நகர்ப்புறங்களில் 50 கோடி புதிய வீடுகள் தேவை.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு போதிய நிதி வசதியில்லாததால் சந்தை, நடைபாதை, விளையாட்டுத் மைதானம், குடியிருப்பு, பாலம் ஆகியவற்றை பராமரிப்பதற்கு முடிவதல்லை எனத் தெரிவித்துள்ளார்.

# காணிக்கையில் உருவான தங்கப்பிள்ளையார்

(திருவனந்தபுரம்)



பல ஆண்டுகளாக பக்தர்கள் காணிக் கையாக வழங்கிய தங்கத்தை கொண்டு கணபதி சிலை உருவாக்கப்பட்டு பழவங்காடி கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

கேரளா, திருவனந்தபுரம் பழவங் காடி பகுதியில், பிரசித்தி பெற்ற மகா கணபதி கோவில் உள்ளது. இக்கோவிலில் பல ஆண்டுகளாக பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய தங்கத்தை கொண்டு, ஒன்றரை அடி உயரம் கொண்ட மூலவர் கணபதி சிலை உருவாக்க முடிவு செய்யப்பட்டது. இச் சிலை கடந்த சனிக்கிழமை காலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## உலகச் செய்திகள்

# பிலிப்பைன்ஸில் பூகம்பம் ஐவர் பலி; 29 பேரை காணவில்லை

பிலிப்பைன்ஸில் நேற்று 6.8 ரிச்டர் அளவிலான பூகம்பமொன்று ஏற்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸின் மத்திய பகுதியிலுள்ள அந்நாட்டின் 3 ஆவது மிகப்பெரிய தீவான நெக்ரோஸ் தீவுக்கு அருகில் இப்பூகம்பம் ஏற்பட்டுள்ளது. இப்பூகம்பத்தினால் பல கட்டடங்கள் இடிந்துள்ளதுடன் மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. இதனால் குறைந்த பட்சம் ஐவர் பலியானதுடன் 29 பேரை காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பூகம்பத்தையடுத்து பிலிப்பைனஸ் அதிகாரிகளால் சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. குய்ஹல்கன் நகரில் மண்சரிவினால் 30 வீடுகள் புதைந்தாகவும் இதில்3 மாணவர்கள் உட்பட நால்வர் பலியானதாகவும் நகர மேயர் ஏர்னெஸ்டோ ரேயஸ் தெரிவித்துள்ளார். சந்தைக்கட்டடமொன்று உடைந்ததால் மற்றொருவர் பலியானதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 5ஆம் திகதி இரவு 10.10 மணி பசி பிக் கடலின் தெற்குப் பகுதியில் உள்ள வனூட்டு தீவில் ரிச்டர் அளவுகோலில் 6.5 நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க நிலவியல் ஆய்வுத்துறை தெரிவித்துள்ளது.

# எகிப்தில் போராட்டக்காரர்களுக்கு உதவி; வெளிநாட்டவர்களுக்கு எதிராக வழக்கு

(கெய்ரோ)

எகிப்தில் அரச சார்பாற்ற நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கிய குற்றச்சாட்டில் அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டவர்கள் 43 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாட்டில் இடம்பெறும் வீதி ஆர்பாட்டங்களுக்கு வெளிநாட்டுக் குழுக்கள் நிதி உதவி வழங்குவதாக எகிப்தின் ஆளும் இராணுவத் தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இதனிடையே அரச சார்பற்ற நிறுவன அலுவலகங்களில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், சில வெளிநாட்டவர்கள் நாட்டில் இருந்து வெளியேற தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் அரச சார்பற்ற நிறுவங்களின் உரிமைகளை மதிக்காத பட்சத்தில் எகிப்திற்கான தமது நாட்டு உதவிகள் குறித்து மீளாய்வு செய்யப்படும் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது

# இஸ்ரேல் பிரதமர் அமெரிக்கா விஜயம்



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹு அடுத்த மாதம் அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். ஈரானின் அணுத்திட்டங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம் என்ற ஊகங்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்த விஜயம் இடம்பெறவுள்ளது. அமெரிக்க தலைநகரில் நடைபெறவுள்ள இஸ்ரேல் ஆதரவு சட்டமன்ற வருடாந்த கொள்கை மாநாட்டில் நெத்தன்யாஹ உரைநிகழ்த்தவுள்ளார்.

எதிர்வரும் நான்காம் திகதிமுதல் ஆறாம் திகதி வரை வோஷிங்டனில் இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக நெத்தன்யாஹ அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இந்த விஜயத்தின் போது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை அவர் சந்திப்பரா என்பது தொடர்பாக குறித்த அறிக்கையில் எந்தவொரு தகவலும் வெளியிடப்படவில்லை.

எனினும் இரண்டு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் பெரும்பாலும் சந்திப்பு இடம்பெறலாம் என சர்வதேச தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இதேவேளை ஈரானின் அணுதிட்டங்கள் தொடர்பாக இஸ்ரேல் தலைவர்களின் வெளிப்படையான கருத்துக்கள் குறித்து அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

# ஆளில்லா விமானத்தாக்குதலால் நூற்றுக்கணக்கானோர் பலி

(பாரிஸ்)

அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதல்களில், பாகிஸ்தானில் பழங்குடியின மக்களின் ப்குதிகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக லண்டனிலிருந்து இயங்கும் புலனாய்வுச் செய்திப் பணியகத்தின் ஆய்வறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

பழங்குடிமக்களின் உள்ளூர்க் கூட்டங்களில் கலந்துகொண்டிருந்தவர்கள் கூட கொல்லப்பட்டுள்ளதாகவும் தாக்குதல்களின் பின்னர் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் மீதும் இரண்டாவது கட்டமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

லண்டன் புலனாய்வுச் செய்திப் பணியகம் குறிப்பான சம்பவங்களை சுட்டிக்காட்டி, அவற்றை நேரில் பார்த்தவர்களின் வாக்குமூலங்களுடன் இந்தப் புலனாய்வை நடத்தியிருக்கிறது.

இதேவேளை அமெரிக்காவின் வான் தாக்குதல்களில் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக கூறப்படுவதை ஜனாதிபதி ஒபாமா அண்மையில் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது

# நான்தான் மீண்டும் ஜனாதிபதி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஜனாதிபதியாக மீண்டும் நான்தான் பதவியேற்பேன் என தற்போதைய ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது, பெரும் சரிவை சந்தித்த அமெரிக்காவின் பொருளாதாரம் தற்போது இயல்புநிலைக்கு திரும்பி வருகிறது. அதற்கான நடவடிக்கைகளில் தனது தலைமையிலான அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. ஒருமுறை ஜனாதிபதியாக இருப்பதால் மட்டுமே, நாட்டின் பொருளதாரத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டுவர முடியாது. எனவே அடுத்த தேர்தலிலும் மக்கள் தன்னை தேர்ந்தெடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

# காபன் வரி திட்டம்; சீனா அச்சம்

ஐரோப்பிய ஒன்றியத்தின் காபன் வரி திட்டத்தில் இணையும் அனைத்து நிறுவனங்களின் விமான சேவைகளையும் சீனா தடை செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. இந்தத் திட்டத்தினால் சேவைகளுக்கான கட்டணம் அதிகரிக்கப்படும் அல்லது புதிய கட்டணம் அறவிடப்படும் சாத்தியம் உள்ளதாக சீன அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் காபன் வரி திட்டத்திற்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என சீன வான் போக்குவரத்து சங்கம் தெரிவித்து ஒரு வாரம் கடந்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய வான்பரப்பிற்குள் பிரவேசிக்கும் விமானங்கள் வெளிவிடும் காபனின் அளவிற்கேற்ப வரி அறவிடும் திட்டம் கடந்த முதலாம் திகதியில் இருந்து அமுல்படுத்தப்பட்டுள்ளது. காபன் வெளியேற்றத்தைத் தடுக்கும் நோக்குடன் கொண்டுவரப்பட்ட இந்த திட்டத்திற்கு சீனா மாத்திரமல்லாது அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளும் எதிர்ப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பதிவிறக்கப் பெட்டகம்

ஆற்றல் கொண்ட இலக்கியம் தன் மௌன இயக்கத்தின் மூலம் மொத்த சமூகத்தின் அடி மனத்தையும் புரட்டுகிறது. புரண்ட மனங்கள் சமூக விவாதங்களை உருவாக்குகின்றன. இப்படித்தான் இலக்கியம் செயற்படுகிறது. **– கவிதாசரண்**

எழுத்தாளனுக்கும் மக்களுக்கும் பொதுவான வாழ்க்கை உள்ளது. அந்த வாழ்க்கையைப் பற்றி மக்களுக்குத் திருப்தி இல்லை. குறையாக இருக்கும் வாழ்வை எழுத்தாளன் அம்பலப்படுத்துகிறான், விமர்சிக்கிறான். மேலான எண்ணங்களை உருவாக்க முயல்கிறான். அதனால் வாசகர்களுக்கு எழுத்தாளன் மீது அக்கறை பிறக்கிறது... யதார்த்தத்தை எதிர்கொள்ளத் தயங்கித் தப்பித்துப் போகும் இயல்பு மனித பலவீனங்களில் மிக முக்கியமான ஒன்றாகும். இதற்கு எதிர்நிலையாக யதார்த்தத்தைக் கண்திறந்து பார்த்து எதிர்கொள்ள வைக்கும் மனித ஆற்றலை நல்ல இலக்கியங்கள் வளர்க்கின்றன. **– சுந்தர ராமசாமி**

படைப்பு எதற்காக? நமது கற்பனையில், படைப்பாற்றலில், சிந்தனையில், அழகில், மயக்கில், வேதனையில், அனுபவங்களில் நம்மை நாம் தேடுகின்றோம். நமது படைப்பில் நம்மைக் கண்டுகொள்கிறோம். நம்மை இனங்கண்டு கொள்கிறோம். புரிந்துகொள்கிறோம். அதன்மூலம் நம்மைத் திருத்துகிறோம். நமது வாழ்வுக்காக நமது வாழ்க்கையைப் படைக்கிறோம். நமக்குப் பலம் கொடுக்க நம்மைத் தேடுகிறோம். நமக்கு நாமே புத்துயிர் கொடுக்கிறோம். உலகத்தை விளங்கிக் கொள்கிறோம். வாழ்க்கையை விளங்கிக் கொள்கிறோம். விமர்சனப்படுத்துகிறோம். திருத்தி வெளியில் விடுகிறோம். இலக்கியம் நாமறியாமல் நம்மைப் புரட்டி மாற்றுகிறது. வாழ்வதற்கான தகுதியை – வாழ்க்கை பற்றிய ஓர் அம்சத்தை இது நமக்கு வழங்குகிறது.

நம்மைப் பற்றிய குறைகளை நாம் பகிரங்கப்படுத்துகிறோம். இதில் நமக்கு வெட்கம் ஏதும் இல்லை. என் குறை இன்னொருவரின் குறையின் தொடர்ச்சியாக அல்லது நீட்சியாக இருக்கிறது. இதுபோலவே அவர் குறை என் குறையின் தொடர்ச்சியாக இருக்கிறது. இந்தச் சங்கிலி எங்கெல்லாமோ விரிகிறது. என் குறையை நான் பிரகடனப்படுத்துவதன் மூலம், நான் எத்தனையோ பேர்களைப் பிரகடனப்படுத்துகிறேன். என் குறையைத் திருத்த, நான் முதலில் இது எத்தனையோ பேரின் குறை என்பதையும் சொல்லித் தீர வேண்டியுள்ளது. நான் திருந்த இவர்கள் திருந்தியாக வேண்டும். இவர்கள் திருந்துவதன் மூலமே என்னைத் திருத்தியாக வேண்டும். இந்தப் பிணைப்புக்காக நிகழ்த்தப்படுகிற சத்திய சோதனைதான் படைப்பு. **– ஞானி**

நம் அனுபவ உலகத்துக்கு அப்பாலும் நம்மை அழைத்துச் சென்று வாழ்வின் விரிவையும் வீச்சையும் நமக்கு உணர்த்தும் சக்தியே கலை ஆகும். **– சக்கரியா**

ஒரு நல்ல படைப்பு மனிதனை மனிதனிடமிருந்து பிரிப்பதையோ, துவேசம் பாராட்டுவதையோ ஊக்குவிக்காது. **– பிரபஞ்சன்**

கலை மனம் சம்பந்தப்பட்டது. ரசனைபூர்வமானது. உண்மையோடு நெருங்கிய சம்பந்தமுள்ளது. நல்ல கலைஞன் ஜனங்களிடம் பொய் சொல்ல மாட்டான். கலைக்குப் பொய் ஆகாது. **–வண்ணநிலவன்**

முடிவில் தர்மத்துக்கு வெற்றி கொடுக்க வேண்டியது கலைத் தொழிலில் ஈடுபடுகிறவனுடைய கடமை அல்ல. தர்மம் இலக்கியத்தில் மட்டும் வெற்றி பெற்றுக் கொண்டிருப்பதால் வாழ்வும் அப்படியே ஆகிவிடுமா? **– டோஸ்டர் வில்லியம்**

கலைப்படைப்பு என்ற தகுதி பெறும் கதைகள், கட்டாயம் நமக்கும் புறஉலகுக்குமான உறவுநிலையில் மாற்றங்களை நிகழ்த்தியே தீரும். **– பெல்ட்டியர்**

வாழ்க்கைச் சிக்கலின் முக்கியத்துவம்தான் படைப்பின் கலைத தன்மையைத் தீர்மானிக்கிறது என்று கூறிவிட முடியாது. அச்சிக்கல் மனித மனதில் தோற்றுவிக்கும் நெருக்கடி மீதுதான் கலைஞனின் அக்கறை நிலைகொள்கிறது. வாழ்க்கையின் சிறு அசைவு கூட மிகுந்த நெருக்கடிக்குள் மனிதனைத் தள்ளிவிடக் கூடும். **– ஜி.நாகராஜன்**


கலைப் பார்வைக்கு அனுபவம் உள்ளாவதே கலை. அனுபவங்கள் கலைஞனின் ஆளுமையால் பாதிக்கப்படும்போது அந்த ஆளுமையின் தன்மைக்கேற்பத் தளமாற்றங்கள் நிகழ்கின்றன. **– ஷெல்லி**

சராசரி வாழ்க்கையின் நுட்பங்களை வெளிப்படுத்துவதன் மூலம், வாழ்க்கை மீதான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்தல் எப்போதும் நல்ல எழுத்தின் அடையாளமாக இருக்கிறது. **– அசோகமித்திரன்**

வெகுஜனத்தின் நம்பிக்கைகளைப் பிரதிபலிப்பதோ புதிய நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்ளும்படி அவர்களைத் தூண்டுவதோ என்னுடைய வேலை அல்ல. அவர்களுடைய பொதுநம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்ட விதிவிலக்கான உண்மைகளைச் சொல்லி அந்தச் சந்தர்ப்பங்களில் அவர்களுடைய விரோதியாகவும், காலத்தின் நண்பனாகவும் இருப்பதே என் வேலையென எண்ணுகிறேன். **– சுந்தர ராமசாமி**

# பதின்மூன்றுடன் கூட்டுவதே தவிர பதின்மூன்றிலிருந்து கழிப்பதில்லை

– துஷி ரணதுங்க கட்டுரையிலிருந்து



1815இல் பிரித்தானியர்கள் கண்டியை ஆக்கிரமிப்புச் செய்தபோது எங்களின் அரசராக இருந்தவர் ஒரு தமிழர், எங்கள் அரசியும் தமிழ் பெண்ணே, கண்டியன் மாநாட்டு ஒப்பந்தத்தில், பெரும்பான்மையான எங்கள் அமைச்சர்கள் தமிழிலேயே ஒப்பமிட்டுள்ளார்கள். பாரம்பரிய கண்டிய நகைகள் தமிழர்களுடையது, எங்களது கண்டிப் பெரஹர தென்னிந்தியாவிலிருந்து வந்தது, யாப்பஹுவவில் உள்ள மகர பாணியிலான சிங்கள சிங்கமானது தென்னிந்தியாவின் பல்லவர்களிடமிருந்து வந்தது. அதற்கு முன்பு அது அனுராதபுரத்திலுள்ள கற்களில் காணப்பட்டது.

மகர பாணியை சேராத நவீன சிங்கள சிங்கம் ஐரோப்பியர்களின் கொடிகளிலிருந்து வந்தது, ஐரோப்பியர்களின் வரவுக்குப் பின்னர் நாங்கள் தென்னிந்திய உடைகள், நகைகள் மற்றும் கலாசாரப் பழக்கங்கள் என்பனவற்றைக் கைவிட்டு, ஐரோப்பிய வகைகளுக்கு சார்பாக மாறிவிட்டோம். எங்கள் வீடுகள் மற்றும் கோவில்களில் மகர பாணி சிங்கத்தை புறக்கணித்து ஐரோப்பிய பாணி சிங்கங்களை அலங்கரிக்கத் தொடங்கினோம்.

20ஆம் நூற்றாண்டில் இலங்கையில் 'பௌத்த சிங்களவர்கள்' எனக் குறிப்பிடப்படும் ஒரு புதிய கூட்டம் தோன்றியது. இவர்கள் சிங்கள இனத்தில் சிறுபான்மையான சிறு குழுக்களாகும். அவர்களது இனவாத அரசியல் நகர்வுகளுக்கு முற்றாக ஆதரவு கிடைக்காமை அல்லது மிகச் சிறியளவே ஆதரவு வழங்கப்பட்டதுடன் அவை அரசியல் ரீதியாக வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டன.

**சுதந்திர சதுக்கத்துக்குப் போய் பாருங்கள், அங்கே மிகப் பிரமாண்டமான ஒரு பௌத்த கொடி பறப்பதை உங்களால் காண முடியும். நான் உரையாடிய சாதாரண சிங்களவர்கள் அனைவரும் அது தவறு மற்றும் குடியரசில் வேற்று மதத்தவர்களும் வாழும்போது அது நீதியற்ற செயல் என்றுதான் கூறினார்கள்.**

மகாவம்சம் நாகர்களைப்பற்றி அதிகமாகவும், சிறிதளவு தெமலாவைப்பற்றியும் (தமிழர்) அதைவிடக் குறைவாக சிங்களவர்களைப் பற்றியும் குறிப்பிடுகிறது, ஆனால் சிங்களவர்களின் உப குழுவான இந்த புதிய குழுவான பௌத்த சிங்களவர்களைப் பற்றி ஓரிடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

இது ஒரு புதிய உருவாக்கம் மற்றும் அதன் பிறப்பிடம் எங்களது நாட்டு பிரஜைகளை சாதி மதம் போன்ற பிரிவுகளில் வகைப்படுத்திய பிரித்தானிய நிருவாகம்தான், மற்றும் இன உணர்வுகள் வெளிக்கிளம்பி அது விரைவிலேயே இன - மொழி ரீதியான தேசியவாதம் எனும் அரசியல் ஆயுதமாக மாறியதுடன் முதலில் இழந்த உரிமைகளை திரும்ப அடையும் எண்ணமாக உதித்தது. பின்பு குடியரசின் கட்டுப்பாட்டுக்கு வித்தியாசமான வேறு விடயங்களையும் கோரும வகையில் மாற்றம் பெற்றது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நாங்கள் இந்த இனம், மதம், எனும் பிரிவினைகளை கைவிட்டு இலங்கை மக்கள் எனும் அடையாளத்துக்கு சாதகமாக மாறவேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளது. இந்தியாவில் குஜராத்திகள், தமிழர்கள், மலையாளிகள் போன்ற பல இனங்கள் இருந்தாலும், அவர்களிடம் முதலில் வருவது இந்தியன் எனும் எண்ணம்தான். ஆனால் இலங்கையில் முதலில் இன உணர்வுதான் வருகிறது ஸ்ரீலங்கன் எனும் எண்ணம் இரண்டாவதாகத்தான் வருகிறது.

இந்த வாரம் ஒரு சிங்கள பத்திரிகை மூலமாக வேளாளர் அல்லாத பிரபாகரன் காட்சிக்குள் வருவதற்கு முன்பு தமிழ் வேளாள தலைவர்களிடமிருந்த உள்நோக்கங் கொண்ட எண்ணங்களைப் பற்றி புத்திஜீவியான சிங்களவர்கள் நமக்கு போதித்திருக்கிறார்கள். ஒரு வேளை சிங்கள வேளாளர்களிடத்திலும் உள்நோக்கங் கொண்ட எண்ணங்கள் இருந்தன என்றும் அதில் குறிப்பிடப் பட்டிருக்க வேண்டும்.

மற்றும் சிங்கள வேளாளர் அல்லாத பிரபாகரன்களும் தங்களைவிட வித்தியாசமான இனத்தவர்களை இந்தத்தீவு ஒரு கூட்டத்துக்கு மட்டுமே சொந்தம் என்னும் மனப்பாங்குடன் தங்கள் கட்டுபபாட்டின் கீழ் கொண்டுவருவதற்காக இராணுவத்தை அல்லது வேறு வழிகளைப் பயன்படுத்தி அதற்குச் சமமான அல்லது அதனிலும் மேலான அழிவுகளை சமூகத்துக்கு ஏற்படுத்தியுள்ளார்கள்.

இந்த குலமரபுவாதிகளின் செயற்பாட்டின் விளைவாக இந்தியத் தமிழர்களின் குடியுரிமை மட்டும் பறிபோகவில்லை, ஆனால் பறங்கியர் சமூகத்தின் அங்கத்தவர்களுக்கும் மற்றும் ஒரு மில்லியனுக்கும் மேலான இலங்கை தமிழர்களின் குடியுரிமையும் பறிபோனது.

திறனுள்ளவர்கள் மற்றும் இயற்கை நீதிப்படி அவர்களுக்கு உரியதை இனரீதியான முறைப்படி பெறுவதற்காக வரிசையில் காத்திருக்க முடியாதவர்கள் நாட்டை விட்டு வெளியேறினார்கள். சுதந்திர சதுக்கத்துக்குப் போய் பாருங்கள், அங்கே மிகப் பிரமாண்டமான ஒரு பௌத்த கொடி பறப்பதை உங்களால் காண முடியும். நான் உரையாடிய சாதாரண சிங்களவர்கள் அனைவரும் அது தவறு மற்றும் குடியரசில் வேற்று மதத்தவர்களும் வாழும்போது அது நீதியற்ற செயல் என்றுதான் கூறினார்கள். சகல இனத்தவர்களும் மற்றும் மதத்தவர்களும் போராடி சுதந்திரம் பெற்றிருக்கையில், சுதந்திர சதுக்கத்தில் பௌத்த கொடி மட்டும் பறப்பதற்கு ஆதரவாகப் பேசும் ஒரு சிங்களவரைக்கூட நான் காணவில்லை.

தமிழர் தாயகம் என்பது 20ஆம் நூற்றாண்டு சிங்களவர் மனங்களை வெறுப்பூட்டும் ஒரு பொருளாக உள்ளது. ஆனால் இந்த தமிழர் தாயகம் (உத்தரதேஸ, பச்சினதேஸ) கண்டிய அடையாளத்திலிருந்து (மாயரட்ட) அல்லது தெற்கத்திய அடையாளத்திலிருந்து (றுகுண) வேறுபட்டதல்ல.

இவைகள் 20ஆம் நூற்றாண்டில் புதிதாக உருவாக்கப்பட்ட பௌத்த சிங்களம் எனும் ஒவ்வாமையான தாக்கமுடைய சிறுபான்மை குழுவினரைக் காட்டிலும் 2000 வருடங்கள் பழைய அடையாளங்கள் கொண்டவை.

அது ஒருபோதும் சிங்களம் மட்டும் என்று இருக்கக் கூடாது, அந்தத் தெரிவை முடிவு செய்யும் உரிமை பிரஜைகளிடம் விடப்படவேண்டும். மாறாக 1950இல் சிங்களத்துக்கு ஆதரவாக ஆங்கிலத்தை கைவிட்டதால் நகைப்புக்குரிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம், மற்றும் இப்போது விவசாயிகளுக்கு தங்கள் பிள்ளைகளை நாடு முழுவதிலுமுள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் ஆங்கிலத்தில் கல்வி கற்க வைத்து பணத்தைப் பாழாக்க வேண்டியுள்ளது.

வெகுஜனம் தங்கள் பிள்ளைகளை றோயல் கல்லூரியில் சேர்ப்பதற்கு முண்டியடிக்கும் அதேவேளை இந்த உயர்வான கல்வி றோயல் மற்றும் சென்ட் தோமஸ் கல்லூரிகளிலிருந்து வெளியேறி மேல்தட்டு பணக்காரர்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலத்தில் படிப்பிக்கும் உயர்தர சர்வதேசப் பாடசாலைகளுக்கு நகர்ந்து விட்டது என்பதை அறியாமலிருக்கிறார்கள்.

உயர்தர மருத்துவ வசதி மற்றும் கல்வி என்பன விலை கொடுத்தே பெறப்படுகின்றன. உயர்தரமான எந்தப் பொருளையும் விலை கொடுத்தால் தான் பெற முடிகிறது. இந்த யதார்த்தம்தான் பிரித்தானிய அரசாங்கத்தை பிரித்தானியப் பல்கலைக்கழகங்கள் அதியுயர் கட்டணங்களை அறவிடுவதை அனுமதிக்கும் முயற்சிக்கு வழிநடத்தியுள்ளது. அப்படியில்லாவிட்டால் உச்சியில் ஏறிநிற்கும் பிரித்தானியப் பல்கலைக்கழகங்கள் கீழே சரியவேண்டி ஏற்படும். டைம் சஞ்சிகை பிரசுரித்துள்ள பட்டியலின்படி உலகின் முதல் 400 இடத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் யாவும் பணக்கார அமெரிக்க பல்கலைக்கழகங்களே.

இலங்கையில் அரசாங்கம் தனியார் மருத்துவக் கல்லூரிகளை அறிமுகப்படுத்துவதற்கு போராடுகிறது. ஆனால் வைத்தியர்கள் அரசாங்க மற்றும் தனியார் வைத்தியசாலைகள் ஆகிய இரண்டிலும் பணியாற்றுவதற்கான சுதந்திரமான தெரிவை வேண்டுவது போலத் தெரிகிறது, எனவேதான் அவர்களால் தங்கள் பிள்ளைகளை மேற்கிலுள்ள உயர்தரப் பல்கலைக்கழகங்களில் படிககவைக்க முடியும், ஆனால் அவர்கள் மற்றவர்கள் தங்கள் பிள்ளைகளை இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் படிக்க வைக்கும் அதே தெரிவை எதிர்க்கிறார்கள்.

அதேபோலத்தான் அதிகாரப்பகிர்வு என்பதும் ஒரு தெரிவே தவிர சக்தி வாய்ந்த ஒரு குழுவினருக்கு தங்களை விட வித்தியாசமானவர்களைக் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செலுத்த அனுமதி வழங்குவது என்பதில்லை.

சுதந்திரமடைந்ததிலிருந்து உள்நோககங் கொண்ட சிங்கள வேளாளர்கள் மற்றும் சிங்கள வேளாளர் அல்லாத பிரபாகரன்களும் தங்களைவிட வித்தியாசமான இனத்தவர்களை தங்கள் கட்டுபபாட்டின் கீழ் கொண்டு 'வருவதற்காக, இராணுவத்தை அல்லது வேறு வழிகளைப் பயன்படுத்தி குறிப்பிடத்தக்க அழிவுகளை சமூகத்துக்கு ஏற்படுத்தியுள்ளார்கள். இது இன்னமும் நடந்து கொண்டேயிருக்கிறது.

**அதிகாரப்பகிர்வு என்பதும் ஒரு தெரிவே தவிர சக்தி வாய்ந்த ஒரு குழுவினருக்கு தங்களை விட வித்தி யாசமானவர்களைக் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செலுத்த அனுமதி வழங்குவது என்பதில்லை.**

இந்த அடக்கு முறையின் எதிர் தாக்கமாக பறங்கியர்கள் மற்றும் குடியேறிச் சென்று விட்ட தமிழர்கள் இவர்களைத தவிர எஞ்சியிருக்கும் உள்நோக்கங் கொண்ட தமிழ் வேளாளர்கள் மற்றும் தமிழ் வேளாளர் அல்லாத பிரபாகரன்களும் ஒரு குறிப்பிட்ட எல்லைவரை அதற்குச் சமமான அல்லது அதிகமான அழிவினை ஏற்படுத்தியுள்ளார்கள், சிங்கள இனவாதத்தின் உற்ற நண்பன் என அவர்கள் பிரபாகரனை அழைத்தனர், அது சிறுபான்மையினரை மேலும் ஒடுக்குவதற்கே உதவியது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு 2009இல் நடந்தவற்றை தலைகீழாக மாற்றியமைப்பதற்கு ஒரு பொன்னான சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. துரதிருர்ஷ்டவசமாக அவர் அதைப் பார்க்கிறாரில்லை.

ஜநா மற்றும் இதர சர்வதேச தொண்டு நிறுவனங்களை வன்னியை விட்டு வெளியே அனுப்புவது, உலகத்தின் ஆர்வத்தினை மேலும் அதிகரிக்கச் செய்வதுடன் தங்களின் பிரதிநிதிகளுக்குப் பதிலாக இன்னும் அதிகமான செயற்கைக் கோள்களின் அவதானத்தை வன்னிமீது செலுத்தி வன்னியில் என்ன நடைபெறுகிறது என்பதற்கான ஆதாரங்களை சேகரிக்கத் தூண்டும் என்பதை அவரும் அவரது நண்பர்களும் உணர்கிறார்களில்லை.

1948இல் சுதந்திரமடைந்ததிலிருந்து அநேகமாக கிட்டத்தட்ட ஒவ்வொரு 20 வருடத்துக்கு ஒரு முறை எமது சனத்தொகைக்கு நூற்றுக் கணக்கில் அல்லது ஆயிரக் கணக்கில் உயிரிழப்பை ஏற்படுத்தும் பயங்கர அழிவு உண்டாகிறது. 1971, 1989, மற்றும் 2009 என அது தோராயமாக சுதந்திரமடைந்ததிலிருந்து ஒவ்வொரு 20 வருடமும் ஏற்படுகிறது, மற்றும் ஒவ்வொரு சுழற்சியிலும் அதன் இழப்புகள் அதிகரித்துக் கொண்டே போகிறது.

அடுத்த சுழற்சிக்கான தயாரிப்பு ஏற்கனவே ஆரம்பமாகி விட்டது. இரண்டு வருடங்களுக்கு முன்புதான் பயங்கரவாதம் தோற்கடிக்கப் பட்டு விட்டது எனச் சொல்லப்பட்டது. ஆனால் இப்போது அதன் உறுமல் வெகு தொலைவில் ஒலிப்பதாகவும் மற்றும் பாதுகாப்பினை பலப்படுத்த வேண்டும் என்று நமக்கு சொல்லப்படுகிறது.

நாம் அனைவரும் ஒரே மக்களாகத் திரண்டு அரசியல் விடயங்களை நவீன அரசியல் கருவிகளைப் பயனடுத்தி அழிப்பதுடன் அதற்கான பரிகாரத்



தையும் காணும் வரைக்கும், நாங்கள் எங்கள் வாழ்க்கையில் உள்நோக்கம் கொண்ட சிங்கள மற்றும் தமிழ் வேளாளர்கள் மற்றும் நாட்டில் தொடர்ந்து பேரழிவை உண்டாக்கும் சிங்கள மற்றும் தமிழ் வேளாளர்கள் அல்லாத பிரபாகரன்கள் போன்றவர்களால் முழுதாக நிலையற்ற அரசியல் நிலைப்பாட்டை அறிமுகப்படுத்துவதை தொடரும் வரைக்கும், வரலாறு மீண்டும் மீண்டும் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

பதின்மூன்றாவது திருத்தத்துக்கு கூடுதலானது மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை என்பன இந்த விடயங்கள் சிலவற்றை விளக்குவதற்காக சிறிதளவு தூரம் முன்னேறியுள்ளன. ஆனால் மிகச் சிலவற்றுக்கு மட்டுமே. அதை கருத்துள்ள ஒன்றாக அநேகமான வெளி உலகத்தினரால் பார்க்க முடியும், ஆனால் அந்த சிறுபான்மையின புதிய குழுவாக உருவெடுத்துள்ள பௌத்த சிங்களவாதிகள் போராடுவார்கள் என்றே தெரிகிறது.

சிறுபான்மையின புதிய குழுவான பௌத்த சிங்களவாதிகள் சிறியளவு சிறுபான்மையாக செயலற்ற அரசியல் பிரதிநிதித்துவம் காரணமாக போராட்டம் நடத்திக் கொண்டு இருந்த போதிலும், அறிவூட்டத்தக்க அரசியல் தலைமை இருந்தால் மட்டுமே பெரும்பான்மையாக உள்ள சிங்களவரகளால் நல் ஒளியினைக் காண முடியும்.

# தீவகத்தில் உட்கட்டுமான அபிவிருத்தி ஜனாதிபதியிடம் விசேட கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்தி தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டமொன்றின்போது வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் சின்னையா சிவராசா மேற்படி கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்தார்.

தீவகத்துக்கான போக்குவரத்து பாலமாக விளங்கும் பண்ணை வீதி புனரமைப்பு மற்றும் மண்டைதீவுக்கான வைத்தியசாலை மீளமைத்தல், அத்துடன் மண்டைதீவுக்கான மின்னிணைப்பு, வீதிகள் புனரமைப்பு மற்றும் நயினாதீவில் தற்போது இயங்காமல் இருக்கும் இறங்குதுறைகளைப் புனரமைத்து மக்கள் பாவனைக்கு அனுமதித்தல், அத்துடன் புங்குடுதீவு குறிகாட்டுவான் இறங்குதுறை, கழுதைப்பிட்டி இறங்குதுறை புனரமைத்தல் மற்றும் தீவுப்பகுதிக்கான வீதிகள் புனரமைத்தல் போன்ற கோரிக்கைகளையே பிரதேச சபை தவிசாளர் ஜனாதிபதியிடம் முன்வைத்தார். (85)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.புஸ்பராஜா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வடமராட்சி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் இ.இராஜசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதுடன் மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி யமுனா இராஜசீலன் வழங்கிக் கௌரவிக் கவுள்ளார். (109)

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (11)

**இனுவில் கந்தனுக்கு இன்று மஞ்சத் திருவிழா**

உலக அதிசயங்களில்
இதுவுமொன்று அதுவே
இனுவிலில் மிளிரும் மஞ்சம்
விலக முடியாத
மரச்சிற்பங்கள் அதன்
விலையோ கோடி எனலாம்.
குலவு கந்தன்
அருள்சுரக்கும் நிலவுசூடும்
தைப்பூச நன்நாளில்
உலவும் பெரிய மஞ்சம்
காண்பீர், உவந்த
சந்நியாசியார் பாதம்
தொழுமின்

கே.எஸ்.சிவஞானராஜா

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஆழியூர் ரதீஸின் ஒரு நெஞ்சத்தின் நெருடல்கள் நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி பீற்றோ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் என்.ஜே.ஞானப்பொன்ராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, சிறப்பு விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை இலங்கை திருச்சபை யாழ். குரு முதல்வர் அருட்பணி ஜெயந்த் ஜெயவீரசிங்கமும், நயப்புரையை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன் ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை பிரதம விருந்தினர் வெளியிட்டு வைக்க யாழ். குரு முதல்வர் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

# தைப்பூச விழா

(சாவகச்சேரி)

மீசாலை வேம்பிராய் சத்திய ஞான கோட்டத்தின் தைப்பூச விழாவின் இறுதி நிகழ்வுகள் இன்று காலை 8.00 மணிக்கு விசேட ஆராதனைகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து கோட்ட வளாகத்தில் காலை 11.00 மணிக்கு செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கடந்த ஐப்பசி மாதம் நடைபெற்ற பொது அறிவுப் போட்டியில் பங்குபற்றிய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு நினைவுச் சின்னம் மற்றும் நினைவுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், 'துளிர்விடும் தேவர்கள்' என்னும் ஒலி, ஒளி குறும்பட வெளியீடு இலங்கை, இந்தியா, மலேசியா, சுவிஸ் போன்ற நாடுகளிலிருந்து வருகைதந்துள்ள தமிழ் அறிஞர்களின் புரட்சித்துறவு கருத்தாடல் போன்ற நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (11)

# இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடர் முழுமையாக வென்றது பாகிஸ்தான்

இங்கிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி முழுமையாகக் கைப்பற்றியது.

டுபாயில் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 71 ஓட்டங்களால் பாகிஸ்தான் வெற்றிபெற்றதை அடுத்து தரவரிசையில் முதலிடத்தில் உள்ள இங்கிலாந்துக்கு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இந்தப் போட்டியின் நான்காவது நாளான நேற்று வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, இரண்டாம் இனிங்ஸில் 252 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இங்கிலாந்து சார்பில் அலெஸ்டெயர் குக் 49, இயன் மோர்கன் 31, ஸ்ரரஸ் 26, மெட் பிரியர் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

முதல் இனிங்ஸில் இங்கிலாந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 99 ஓட்டங்களையும்



இரண்டாம் இன்னிங்ஸில் 365 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டது.

பாகிஸ்தான் சார்பில் இரண்டாம் இனிங்ஸில் அஸார் அலி 157 ஓட்டங்களைப் பெற்றதுடன் யுனிஸ் கான் 127 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பாகிஸ்தான் சார்பில் அப்துர் ரஹ்மான் 2, சயிட் அஜ்மல் மற்றும் உமர்குல் இருவரும் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக பாகிஸ்தானின் அசார் அலியும் தொடரின் சிறப்பாட்டக்காரராக சயீட் அஜ்மாலும் தெரிவாகினர்.

## இனப்பிரச்சினைக்கான...

தீர்வுத் திட்டமொன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டுமென இந்தியா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வரும் நிலையில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்ட மூலம் நாட்டின் அரசியல் சாசனத்தில் ஏற்கனவே இருக்கும் ஓர் விடயம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை அர்த்தபூர்வமாக அமுல்படுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என அவர்குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்களின் அதிகாரங்களை கூட்டுவதனை விடவும், ஆளுநர்களின் அதிகாரத்தைக்கூட்ட முடியும் என அவர் தெரிவித்துள்ளார். காணி, பொலிஸ் மற்றும் நிதி ஆகிய அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த துறைகளில் மத்திய அரசாங்கம் தலையீடு செய்தால் மாகாணசபைகளின் அதிகாரங்கள் வெகுவாக வரையறுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கின் குறைகள்...

பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன்போது அரசாங்க அதிபர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளினதும் ஏனைய துறைசார்ந்த அதிகாரிகளினதும் கருத்துக்களையும் கோரிக்கைகளையும் ஜனாதிபதி விரிவாக கேட்டறிந்தார்.

இதனையடுத்து அங்கு உரையாற்றிய ஜனாதிபதி காணிகள் பகிர்ந்தளிப்பது தொடர்பான பிரச்சினை வடமாகாணத்தில் மட்டுமல்ல நாடளாவிய ரீதியில் காணப்படுகிறது. சில கோரிக்கைகளை உடனடியாக செயற்படுத்த முடியாது. இந்நாட்டில் தற்போது அபிவிருத்தியும் சமாதானமும் முக்கியமானது என்ற நிலைப்பாட்டிலேயே எமது அரசு கவனம் செலுத்தி வருகின்றது.

அத்துடன் எனக்கும் எனது சகோதரன் பசில் ராஜபக்ஷவுக்கும் மகன் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் சண்டை இருப்பதாக பொய்ச் செய்திகளை சில ஊடகங்கள் திட்டமிட்டு வெளியிட்டு வருகின்றன. சாவகச்சேரி ஆதார வைத்திசாலையில் பரசிற்றமோலுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக இங்குள்ள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறான செய்திகள் குறித்து மக்கள் கவனமாக இருக்க வேண்டும். வடமாகாணத்தில் சுகாதாரத்துறையில் மட்டுமல்ல அனைத்துத் துறைகளிலும் குறைகள் இருக்கின்றன. நிச்சயம் அவற்றுக்கு உரிய வகையில் தீர்வு காணப்படும் எனத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொருளதாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), நாடாளுமன்ற உறுப்பினர் உனைஷ் பாரூக், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் வடமாகாணத்திலுள்ள மாவட்டங்களின் அரச அதிபர்கள், துறைசார்ந்த அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, நேற்றைய அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளாத போதிலும், கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

2 நாள் பயணமாக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சாவகச்சேரி வைத்தியசாலை விடுதித் திறப்பு நிகழ்வு, யாழ். மத்திய கல்லூரி நீச்சல் தடாக திறப்பு நிகழ்வு மற்றும் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற வடமாகாண அபிவிருத்திக் குழு மீளாய்வுக் கூட்டம் போன்றவற்றில் கலந்து கொண்ட பின்னர் நேற்று மாலை கொழும்பு திரும்பினார்.

## ஆணைக்குழுவின்...

இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சில சம்பவங்கள் தொடர்பில் மேலதிக விசாரணை அவசியம் என்பதனை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவே வலியுறுத்தியுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் உரிய முறையில் அமுல்படுத்துவதே இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கி வரும் சவால் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆணைக்குழுவின் அறிக்கை...

ஆணைக்குழுவின் மூலம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த மேற்கொள்ளும் சகல முயற்சிகளுக்கும் அமெரிக்கா முழுமையான ஆதரவினை வழங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பணிகள் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அடித்தளத்தை இட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் மக்களுக்கான...

தான் ராஜீவ் காந்தியின் நெருங்கிய நண்பன் ஆனால் சோனியா காந்தியின் அரசியல் எதிரி என்றும், இந்திய ஜனதாக் கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசனிடம் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் கொழும்பில் நடைபெற்ற மனோ கணேசன்-சுப்ரமணிய சுவாமி இடையிலான பேச்சுவார்த்தையின்போது ஜனத்ாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி இவ்வாறு தெரிவித்தார். இச்சந்திப்பில் ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் சந்திரலேகாவும் கலந்துகொண்டார்.

## வடக்கு, கிழக்கு...

முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சில மக்கள் எங்களுடைய நடவடிக்கைகளை விரும்பாது எமக்கு எதிரான கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.

முன்னாள் புலிப் போராளிகளுக்கு எதிராக அரசு செயற்படவில்லை அவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்தி சமூகத்தில் இணைத்துள்ளோம். இன்னும் 700 முன்னாள் புலிப் போராளிகளே விடுவிக்கப்படவுள்ளனர்.

புலிகள் இயக்கத்தின் சிரேஷ்ட தலைவர் வி.பாலகுமாரன் குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், குறித்த விடயம் தொடர்பில் தனக்குத் தெரியாது எனவும் அவர் தடுப்பில் உள்ளாரா என தனக்குத் தெரியாது எனவும் இறுதிப் போரில் இறந்து விட்டதாகவே தகவல்கள் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வடக்கில் குறிப்பிட்டளவு இராணுவத்தினரே உள்ளதாகவும் யுத்தத்தின் பின்னர் அவர்களை உடனடியாகத் திருப்பி அழைக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# குடாநாட்டுக்கான மின் வலையமைப்பு தேசிய மின் கட்டமைப்புடன் இணைவு



(கிளிநொச்சி)

2012 ஆம் ஆண்டில் அனைவருக்கும் மின்சாரம் என்ற மகிந்த சிந்தனை தொலைநோக்கு திட்டத்தின் கீழ் யாழ். குடாநாட்டு மின் வலையமைப்பு 33 ஆயிரம் உயர் மின்வலு மார்க்கத்தினூடாக தேசியமின் கட்டமைப்புடன் நேற்று இணைக்கப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலை வருமான முருகேசு சந்திரகுமார் ஆகியோரின் அனுசரணையுடன் மின்வலு எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, முருகேசு சந்திரகுமார் இணைந்து நேற்று பரந்தன் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இணைப்பு மையத்தினூடாக இணைப்பு ஏற்படுத்தினர்.

இதைத்தொடர்ந்து அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த இணைப்பினூடாக பளை, கொடிகாமம், சாவகச்சேரி வரையிலான மக்கள் சீரான மின்சாரத்தினை பெற்றுக்கொள்வர். அத்தோடு ஏ-9 நெடுஞ்சாலையை அண்டிய பகுதிகளுக்கும் ஏனைய கிராமப்புரங்களுக்கும் மின்சாரத்தினைக் கொண்டு செல்லக்கூடிய சாதகமான நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதற்கூடாக கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்ட காலமாக மின்சாரத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்த மக்களுக்கு விரைவாக மின்சாரத்தினை வழங்க முடியும். இவ்வாறான சாதகமான நிலைமையை மிக விரைவாக உருவாக்க உதவிய அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எமது மாவட்ட மக்களின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கை மின்சாரசபையின் மேலதிக பொது முகாமையாளர் ரஞ்சித்குணவர்த்தன, இலங்கை மின்சாரசபையின் யாழ்.பிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் குணதிலக வடக்கின் வசந்த திட்ட முகாமையாளர் குணசீலன் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# பாடசாலை நேரத்தை அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

அரசாங்க பாடசாலைகள் நடைபெறும் நேரத்தை மேலும் அரை மணித்தியாலத்தால் அதிகரிக்க அரசாங்கம் கவனமெடுத்துள்ளதாக தெரியவருகிறது.

தற்போது பாடசாலை நடைபெறும் கால நேரத்தில் பாடங்களை போதிப்பதற்கான நேரம் போதவில்லை எனக் கல்வி நிபுணர்கள் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக பாடசாலை நடைபெறுகின்ற நேரத்தை அரை மணித்தியாலங்களால் அதிகரிக்குமாறு அவர்கள் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளனர் என்று லங்கா சி நியூஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

# அமைச்சர் விமலின் மனைவி கண்டுபிடிக்கப்பட்டார்



(கொழும்பு)

வனப்பகுதியில் காணாமல் போயிருந்த அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சசி வீரவன்ச கெபிலித்த பிரதேசத்தில் வைத்து நேற்றைய தினம் கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி உட்பட ஒரு குழுவினர் மூன்று வாகனங்களில் மத வைபவத்தில் கலந்து கொள்வதற்காக தேவாலயம் ஒன்றுக்கு பயணம் கொட்டியாகலை பிரதேசத்தின் ஊடாகச் சென்று கொண்டிருந்த போது அவர்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போது இவர்கள் பயணித்த வாகனம் கெபிலித்த தேவாலய பிரதேசத்தில் சேற்றில் புதையுண்ட நிலையில் காணப்பட்டமை தெரிய வந்தது. இதனையடுத்து அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

## மாங்குளம் யுவதிக்கு 18 மாத சிறை

(கொழும்பு)

கொழும்பில் பாரிய தாக்குதல்களை நடத்துவதற்காகத் திட்டமிட்டிருந்த விடுதலைப் புலிகள் தொடர்பான தகவல்களை வழங்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த பெண்ணொருவர் குற்றவாளியாகக் காணப்பட்டதனையடுத்து அவருக்கு 18 மாத சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டது. மாங்குளத்தைச் சேர்ந்த நகுலா திருக்குமார் என்ற யுவதிக்கே கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ இந்தத் தண்டனையை வழங்கினார். இவர் 2006 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார்.

# இத்தாலியில் கடும் குளிர் இலங்கையர் மரணம்

(ரோம்)

இத்தாலியில் நிலவி வரும் கடும் குளிர் காரணமாக இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலியின் டுஸ்கனி எனும் நகரில், வீடற்று குடிசையில் வசித்து வந்த 37 வயதான இவர் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒருவார காலமாக ஐரோப்பாவில் வீசும் கடும் குளிர் காரணமாக அந்நாட்டு மக்கள் 300 பேர் வரை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக,. இத்தாலியில் மாத்திரம் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

வீசும் கடும் பனிப்பொழிவு காரணமாக, மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கி கிடக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வீதிகளில் படிந்துள்ள பனிப்பொழிவினை அகற்றும் நடவடிக்கைகளிலும், பனியில் சிக்கிய வாகனங்களையும் இராணுவ வீரர்கள் மீட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட யா/உடுவில் மல்வத்தை றோ.க.த.க.பாடசாலை, யா/கோட்டைக்காடு அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

மேற்படி பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 3 ஐ சேர்ந்தவர்களிடமிருந்தும், இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, 2-1, 2-II (பட்டதாரி) ஐ சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 14.02.2012 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# தனியே சென்ற யுவதியின் சங்கிலி அறுக்க முயற்சி

(நெல்லியடி)

நெல்லியடி திருமகள் சோதிபஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்னாலிலுள்ள ஐயப்பன் கோவில் வீதியில் இளம் பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்டவேளை, அப்பெண்ணின் சாதுரியத்தால் முறியடிக்கப்பட்டது.

நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணை இரண்டு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்தனர். திடீரெனக் குறித்த பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலியை இவர்கள் அறுக்க முற்பட்ட வேளை அவர் சங்கிலியை இறுகப் பற்றிப்பிடித்துள்ளார். இதன் போதான இழுபறியில் சங்கிலியின் ஒரு துண்டு குறித்த இளைஞர்கள் வசம் சென்றது. சம்பவம் நடைபெற்றவேளை, குறித்த பெண் கூக்குரலிடவே மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் தப்பியோடிவிட்டனர். இதன் போது அங்கு கூடியவர்களால் மோட்டார் சைக்கிள் இலக்கம் குறிப்பெடுக்கப்பட்டதுடன், இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (12)

## மருத்துவக் கருத்தரங்கு

(புத்தூர்)

நீரிழிவு நோயை உணவுப் பழக்க வழக்கத்தினால் கட்டுப்படுத்த முடியும் என்ற தொனிப்பொருளில் இன்று மாலை 6.00 மணிக்கு புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்தில் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு மருத்துவ ஆலோசகர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கருத்துரையாற்றவுள்ளனர். இந்த மருத்துவக் கருத்தரங்கை நியூ ஆரோக்கியா மருத்துவமனை ஏற்பாடு செய்துள்ளது.

## ஹெரோயின் விற்பனை; பெண்ணுக்கு மரண தண்டனை

(கொழும்பு)

ஹெரோயின் வைத்திருந்தமை விற்பனை செய்தமை தொடர்பில் பெண்ணொருவருக்கு கொழும்பு, மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்துள்ளது.

குறித்த பெண் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டிருந்தமை சந்தேகமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் மரண தண்டனை விதிக்கப்பட்டதாக மேல் நீதிமன்ற நீதிபதி ஜீ. பத்மன் சூரசேன தெரிவித்தார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் குறித்த பெண் 2003 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பொரளை பகுதியில் கைதுசெய்யப்பட்டார்.

இவர் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அவரிடமிருந்து 40 கிலோகிராம் போதைப்பொருளும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பொன்சேகாவின் விடுதலைக்கு மன்னிப்புக் கோரமாட்டோம்



(கொழும்பு)

சரத் பொன்சேகாவை விடுவித்துக் கொள்ள ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோர தயாரில்லை, ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரும் அளவிற்கு அவர் எவ்வித தவறும் செய்யவில்லை என அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அனோமா பொன்சேகா இவ்வாறு குறிப்பிட்டார்.

சரத் பொன்சேகாவை விடுவிக்க ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் ஜனாதிபதியுடன் தொடர்ச்சியாக பேசி வருவதாகவும் பேச்சுவார்த்தையில் இணங்கப்படக்கூடிய விடயங்கள் இருக்குமாயின் அது குறித்து ஆராய தயார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்த வேண்டும்

## தென்னாபிரிக்கா கோரிக்கை

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தென் ஆபிரிக்கா கோரியுள்ளது. இது தொடர்பாக தென்னாபிரிக்கா அரசு மேலும் தெரிவித்துள்ளதாவது,

பரிந்துரைகள் துரித கதியில் அமுல்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் சகல அரசியல் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தேசத்தை கட்டியெழுப்புவதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் மெய்யானவே ஒத்துழைப்பு வழங்கத் தயார் என தென் ஆபிரிக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர் மக்களை மீள் குடியேற்றல், மனித உரிமை பாதுகாப்பு, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு போன்ற நடவடிக்கைகள் தொடர்பில் ஆணைக்குழு காத்திரமான பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறெனினும், மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய நபர்களுக்குஎதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து அறிக்கையில் போதிய அளவு தெளிவாக குறிப்பிடப்படவில்லை என மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 பெப்ரவரி 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.